கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 20 | திகதி : 25.12.2023 | விலை : 75.00



## திருத்தந்தையின் நத்தார் செய்தி

கிறிஸ்மஸ் கடவுள் குழந்தையாக மாறியதன் மறைபொருளை மனித இதயங்களில் மீண்டும் எழுப்புவதாக இருக்கவேண்டும். இக் கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில் விசேட விதமாகப் புனித பூமியில் துன்புறும் அனைவரையும் நாம் நினைவு கூரவேண்டும் என வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். இயேசு பிறந்து வாழ்ந்து, இறந்து, உயிர்த்த புனித பூமியானதுபோரினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பத்து ஆண்டு களுக்கும் மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போர் மற்றும் மோதல்க ளினால் துன்புறும் மக்கள் அனைவரும் பாதுகாக்கப்பட ஒற்றுமையாக வாழ அவர்களுக்காக மன்றாடுவோம். பக்கம் 3







## கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட கூட்டாக ஒருமித்துப் பயணிப்போம்

-கிறிஸ்மஸ் செய்தியில் யாழ். ஆயர்

திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவை ஓர் கூட்டொருங்கியக்கத் திரு அவையாக பயணிக்க வேண்டும் என விரும்புகிறார். திருஅவையில் கூட்டாக ஒருமித்துப் பயணிக்க நாம் நம் அன்னை மரியாவைப்போல் நம்மை இறைதிட்டத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். புனித ஜோசேப்பைப் போல கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இடையர்களைப் போல எளிமையாக வாழவேண்டும். ஞானிகளைப் போல தாழ்ச்சியோடும், விடாமுயற்சியோடும் தேடலுடன் இருக்க வேண்டும். பக்கம் 3

சமூகவலைத்தள விரிவு வலையில்
கூட்டிக் குவிக்கப்பட்டுள்ளது
இப்பிரபஞ்சம்
எனினும்
மென் உணர்வுகொண்ட
உயிரியல் பரிமாணங்கள்
மங்கலாகியுள்ளன
ஒருமைப்பாட்டில் வீழ்ந்த
இராட்சத பிளவால்
உறைந்து கிடக்கிறது உலகம்
அத்லாந்தின் அபாய சுழிக்குள்
பிறரன்பு
இருப்புடன் இறந்த பிணமாகிக்கிடக்கிறது
ஆயினும்
அங்கொன்றும் இங்கொன்றுமான
ஒளியின் கூறுகள்
நம்பிக்கையளிக்கின்றன
நாசரேத்தூர் பெண்மையின் கீழ்ப்படிவும்
நீதிமானின் பூந்தளிர் எளிமையும்
வறண்டு கிடக்கும்
பிரிவினைவாத சூனியவெளியை
நிரப்பவேண்டும்
கூட்டொருங்கின் கரங்கள்
இதைச் செய்யும்
பிரார்த்தனை ஆண்டில்
ஞானிகளின் தேடல்களோடு புறப்படுவோம்
மானுட இயேசுவின் மறுவிம்பங்களாய்






ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## எமது எண்ணம்

### இறைவேண்டல் ஆண்டு - 2024

இஸ்ரேல் பலஸ்தீன போர், உக்ரைன் - ரஷ்யப் போர் ஆகியவற்றுக்கு மத்தியில் இன்று உலக அரசியல் ஒழுங்கு குழப்பியுள்ள நிலையில் இலங்கையைப் போன்ற பொருளாதார வளர்ச்சி குறைவடைந்த நாடுகள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளன. இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டில் உலகை பொருளாதார மீட்சி பெற்ற நிலைக்கு மாற்ற வேண்டும் எனப் பல கோரிக்கைகள் எழுந்துள்ளன.

ஆனால் இலங்கை உள்ளிட்ட வளர்ச்சி குன்றிய நாடுகளில் பொருளாதாரம் மீட்சி பெறக்கூடிய நிலையில் இல்லை என்றே பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர். மிக ஆபத்தான கட்டத்தில் வளர்முக நாடுகளின நிலைமை உள்ளது.

இப் பின்னணியோடு தான் 2024 ஆம் ஆண்டு பிறக்கிறது. பொருளாதார நிலை பலவீனமாக இருந்தாலும் மக்கள் ஒவ்வொருவருடைய மனநிலை இறை இயேசுவின் நற்செய்தியுடனும் நம்பிக்கையோடும் உறுதியாக இருந்தால் மாற்றங்களைக் காணமுடியும்.

இயேசு பிறப்பின் செய்தி நமக்கு இன்று கூறுவது என்னவென்றால் ஏழை - பணக்காரன், ஆண்டான் - அடிமை, ஆண்- பெண், வெள்ளை - கறுப்பு மற்றும் சாதிய வேறுபாடுகள் என்றும், இனம், மொழி என்ற நிலையில் வன்முறைக் கலாசாரங்கள் நிலவி வரும் சூழலில், அனைத்து மக்களும் ஒற்றமையுடன் வாழவும், ஒன்றாக, நிறைவாக அனைத்தையும் பகிர்ந்து வாழவும் வேண்டும் என்பதே ஆகும்.

இன்று பலர் ஆடம்பரங்களோடும் டாம்பீகத்தோடும் சமூகத்தில் நான் பெரியவன் என்ற மனநிலையில் வாழ்கின்றனர். ஆதனால் சமூகத்தில் ஏழைகள் ஒதுக்கப்பட்டு ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை யாரும் கண்டு கொள்வதில்லை. ஆனால் இயேசு அவர்களோடு தான் இருக்கின்றார். ஒரு காலத்தில் நாமும் ஏழைகளாக இருந்திருக்கக்கூடும், அந்தநேரம் இயேசு தானே எம்மை நிறைவுள்ளவராக்கினார் என உணரவேண்டும்.

அப்படி இருக்கும் போது சமூகத்தில் ஏழைகளை யும் அந்தஸ்தில் குறைந்தவர்களையும் புறக்கணிக்க முடியுமா?

இயேசுக் கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து விலைமதிக்க முடியாத மீட்பை சிலுவையில் பெற்றுத் தந்ததை நாம் மகிமைப்படுத்தவில்லை என்றால் அவரது மீள் வருகை யின்போது நாம் கைவிடப்படுவோம்.

எனவே கிறிஸ்து பிறப்பை இயேசுவின் சிந்தையோடு நம்மை நாமே தாழ்த்தி ஏழைகளுக்கும் திக்கற்றோருக்கும் உதவி செய்து கத்தோலிக்க திருஅவையின் நாமத்தை மேன்மைப்படுத்தவேண்டும்.

இயேசு பிறப்பு அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது. அவரது மரணம் அனைவருக்கும் அன்பை புரிய வைக்கிறது. அவரது உயிர்த்தெழுதல் அனைவருக்கும் வெற்றியைத் தருகின்றது. இயேசு விண்ணகத்தில் இருந்து வந்தவர். ஆனாலும் மண்ணக வாழ்க்கை வாழ நம்மை மாற்றிக் கொண்டார்.

இதனைப்புரிந்துகிறிஸ்துபிறப்பைக்கொண்டாடுவோ மாக. வறுமை, குடும்பப் பிரச்சினைகள் என்று பல்வேறுபட்ட துயரங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரும் இந்த நாளில் எங்கள் வேதனைகள். துயரங்களைப் போக்க இயேசுவின் பிறப்பு வழிசமைக்கட்டும்.

மலரும் புத்தாண்டை திருஅவை இறைவேண்டு தலின் ஆண்டாக அனுஷ்டிக்க அழைப்புக் கொடுத்துள்ளது. இறைவனுடனான செப வாழ்வில் இவ்வாண்டில் நிலைத்து வாழ்வோம். தனிமையிலும் குடும்பமாகவும் அன்பியங்களாக வும் கூடிச் செபிப்போம். திருத்தந்தை பிரான்சிஸ் கூட்டொருங்கியக்கமாக ஒன்றித்து திருஅவையாகப் பயணிக்க எம்மை அழைத்துள்ளார்.

எனவே புத்தாண்டில் இறையாசீருடன் எம் நம்பிக்கை வாழ்வைப் புதுப்பித்து ஒருமித்துப் பயணிப்போமாக.

உங்கள் அனைவருக்கும் இறையாசீருடன் கூடிய கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## மறைநதி கத்தோலிக்க ஊடகமையம் ஆரம்பமாகி 2 ஆண்டுகள் நிறைவு



யாழ். மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க ஊடக மையம் ஆரம்பிக்கப்பட்டதன் இரண்டாம் ஆண்டு நிறைவுநாள் நிகழ்வு 28ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தில் நடைபெற்றது.

மறைநதி ஊடகமைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் Speed IT Net நிறுவனத்தினால் ஊடகமையத்திற்காக வடிவமைக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி (அன்றொயிட்) செயலி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இச்செயலிக்குரிய செயற்பாட்டு விளக்கத்தை Speed IT Net நிறுவன முகாமையாளர் திரு. தவறுபன் வழங்கினார். தொடர்ந்து whatsapp சமூகவலைத்தள செயலியூடாக இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட பசாம் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் மற்றும் மறை அலை தொலைக் காட்சியில் வாராந்தம் ஒளிபரப்பப்படும் வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் உதயன் பத்திரிகைச் செய்தி ஆசிரியர் திரு. பிரபாகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

### துறவற சபை அருட்சகோதரிகளால் முன்னெடுக்கப்பட்ட கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்



யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் துறவற சபைகளைச் சேர்ந்த அருட்சகோதரிகளுக்காக முன்னெடுக்கபட்ட கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பயோ.ஜெபரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 70வரையான அருட் சகோதரிகள் கலந்துகொண்டனர்.

## யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க சட்டவாளர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட சிறப்புத் திருப்பலி



யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க சட்டவாளர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு 10ஆம் திகதி கடந்த ஞாயிற் றுக்கிழமை யாழ். புனித மரியன்னை பேரால யத்தில் நடைபெற்றது.

மறைமாவட்டப் பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மௌலிஸ் அடிகளா ரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்புத் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத் தார்.

திருப்பலியைத் தொடர்ந்து சட்டத்தரணிகளுக் கான ஒன்று கூடல் இடம்பெற்றது. இந்நிகழ் வில் அருட்தந்தையர்கள், நீதிபதிகள், சட்டத் துறை மாணவர்களென பலரும் பங்கு பற்றி யிருந்தனர்.

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க சட்டவாளர் அமைப்பு மறைமாவட்ட பொதுநிலை யினர் கழகத்தின் ஓர் அங்கமாகச் செயற்பட்டு சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை மக் கள் மத்தியில் ஏற்படுத்தி அவை தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றமை யும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## திருத்தந்தையின் கிறிஸ்மஸ் செய்தி



**குழந்தை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!**

கிறிஸ்து பிறப்பு விழா கடவுள் மனிதராக, அன்னை மரியிடத்தில் மாட்டுத் தொழுவத்தில், தீவனத் தொட்டியில் எளிய மனிதராகப் பிறந்தார் என்ற மறைபொருளை எமக்கு நினைவூட்டுகின்றது. கிறிஸ்மஸ் கடவுள் குழந்தையாக மாறியதன் மறைபொருளை மனித இதயங்களில் மீண்டும் எழுப்புவதாக இருக்கவேண்டும்.

இக் கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில் விசேட விதமாக புனித பூமியில் துன்புறும் அனைவரையும் நாம் நினைவுகூரவேண்டும் என வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். இயேசு பிறந்து வாழ்ந்து, இறந்து, உயிர்த்த புனித பூமியானது போரினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போர் மற்றும் மோதல்களினால் துன்புறும் மக்கள் அனைவரும் பாதுகாக்கப்பட ஒற்றுமையாக வாழ அவர்களுக்காக மன்றாடுவோம். கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட முடியாத நிலையில் வலியுடனும் துன்பங்களுடனும் வாழும் மக்களுக்காக மன்றாடுவதுடன், உடனிருந்து உதவிடுவோம். இயேசுவின் நற்செய்திக்கு ஏற்ப நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியுடன் வாழ ஆசித்துக் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கின்றேன்.

## கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட கூட்டாக ஒருமித்துப் பயணிப்போம்



கிறிஸ்து பிறப்பு விழாவில் இறையருள் உங்களுடன் இருப்பதாக! கிறிஸ்மஸ் விழா வின் உண்மையான பொருள் 'அன்பே'. கடவுள் உலகை எந்த அளவுக்கு அன்பு செய்கின்றார் என்றால், தன்னுடைய ஒரே மகனைக் கையளிக்கும் அளவுக்கு அன்பு செய்தார். ஏனெனில் அவரில் நம்பிக்கை கொள் வோர் அழிந்துவிடாமல் நிலைவாழ்வைப் பெறும் பொருட்டு இவ்வாறு செய்தார் (யோவா.3:16-17). கிறிஸ்மஸ் விழாவின் உண்மைப் பொருள் கடவுளின் வியக்கத்தக்க அன்புச் செயலைக் கொண்டாடுவதே!

திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவை ஓர் கூட்டொருங்கியக்கத் திருஅவையாக பயணிக்க வேண்டும் என விரும்புகிறார். திருஅவையில் கூட்டாக ஒருமித்துப் பயணிக்க நாம் நம் அன்னை மரியாவைப்போல் நம்மை இறைதிட்டத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். புனித ஜோசேப்பைப்போல கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இடையர்களைப் போல எளிமையாக வாழவேண்டும். ஞானிகளைப் போல தாழ்ச்சியோடும், விடாமுயற்சியோடு தேடலுடன் இருக்க வேண்டும். எனவே நாம் கிறிஸ்து பிறப்பு விழாவைப் பொருளுள்ள விதத்தில் கொண்டாடுவதற்கு 'ஒன்றிப்பு', 'பங்கேற்பு' 'நற்செய்தி அறிவிப்பு' போன்ற பண்புகளை எம் வாழ்வாக்குவோம்.

இயேசு பிறந்த புனித பூமியில் இன்று போரினால் துன்புறுவோருக்காக மன்றாடுவோம். நாம் அனுபவித்தது போல இன்று அவர்கள் அடையும் போரின் வலிகள் தொடக்கத்தில் இருந்து விடுபட்டு அமைதியில் வாழ அமைதியின் அரசராம் குழந்தை இயேசுவி டம் மன்றாடுவோம்.

யூபிலி ஆண்டுக்காகத் தயாராகும் நாம் இணைந்து இறைவேண்டல் ஆண்டாகிய 2024 இல் இறைவனுடன் செபவாழ்வில் ஒன்றித்து, எம் ஆன்மீக வாழ்வில் ஓர் புதுப்பித்தலை ஏற்படுத்துவோமாக.

உங்கள் ஒவ்வொருவருக்கும் அருளும் அகமகிழ்வும் நிறைந்த கிறிஸ்மஸ், புத்தாண்டு 2024 நல் வாழ்த்துக்களும் இறையாசீரும் உரித்தாகுக.

## இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கிறிஸ்மஸ் செய்தி

கிறிஸ்மஸ் என்பது இறைமகனும் மரியாவின் மகனுமாகிய இயேசுவின் பிறப்பின் கொண்டாட்டமாகும். இப்பிறப்பினை அர்த்தமுள்ள பயன் தரும் வகையில் கொண்டாடுவதற்கு இயேசுவின் இவ்வுலக பணியை இறைவார்த்தையின் ஒளியில் ஆழமாகத் தியானிக்க வேண்டும். பிலாத்துவின் முன் நடந்த விசாரணையின்போது இயேசு அவருக்குக் கூறியது, 'உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன் இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்கு செவிசாய்க்கின்றனர்' (யோவான் 8:37)

எனவே 'கிறிஸ்மஸ்' வாழ்க்கையில் உண்மையாக இருக்க நம்மை அழைக்கின்றது. "நானே உண்மை" என முன்பு ஓர் சந்தர்ப்பத்தில் இயேசு எடுத்துரைத்தார். 'என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களால் இருப்பீர்கள். உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்.' (யோவான் 8:31-36)


உண்மையை மதித்து ஏற்றுக் கொள்வது என்பது மதத்தின் முக்கிய மதிப்பாகும். இது சமூகத்தை பொய், நேர்மையின்மை மற்றும் ஆட்சியிலும் மக்களின் அன்றாட வாழ்விலுமுள்ள ஊழல்கள் அனைத்தையும் நீக்குகின்றது. இவ்வகையில் நம் அனைத்து குடிமக்களும் தம்மிடையேயுள்ள வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது ஒன்றிணைத்து அனைவரின் பொது நலனுக்காக உழைக்க வேண்டிய அவசியத்தேவையை நாம் காண்கின்றோம். இதுவே நாட்டின் அமைதி மற்றும் உண்மையான செழிப்பான வாழ்வுக்கான பாதை.

இறைவார்த்தை இவ்வாறு விரிவாகக் கூறுகின்றது. 'கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்.' (பிலிப். 2:6-7) இவ் இறைவார்த்தைகள் இயேசுவின் பிறப்பின் அர்த்தத்தின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. வாழ்வின் தேவைகளைச் சந்திக்கப் போராடுபவர்களுக்கு நம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளத் தூண்டுகின்றது. இது நம் நாட்டின் கஸ்டமான காலம். உணவு, மருந்து, எரிபொருள், மின்சாரம் மற்றும் தண்ணீர்க்கட்டணம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்கு ஏற்றவாறு வருமானமும் ஊதியமும் அதிகரிக்காததனால் மக்கள் தங்கள் அன்றாட பாவனைகளைக் குறைக்க வேண்டியுள்ளது. ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்து வருகின்றது. குறிப்பாக நம் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். நமது கிறிஸ்மஸ் கொண்டாட்டம் எளிமை மற்றும் ஆடம்பரம் இல்லாமல் இருக்கட்டும். உண்மையின் பக்கம் இருக்க இயேசுவின் குரலுக்கு செவிசாய்போம் " மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்" (மத் 25:40) இதுவே மீட்பராகிய இயேசு கிறிஸ்துவினுடனான நமது சந்திப்பிற்கு உத்தரவாதமளிக்கிறது.

வெறும் பொருள் மேம்பாடு மற்றும் செழுமைக்கு அப்பாற்பட்ட மனித உண்மைகள் மற்றும் அபிலாசைகள் பற்றிய உண்மையைப் பற்றிய அதிக விழிப்புணர்வை கிறிஸ்மஸ் நமக்குக் கொண்டு வருகிறது. இறைமகன் இயேசு மனித அவதாரம் எடுப்பதன் மூலம் மனித காருணியத்தை நாம் ஆழமாக புரிந்து கொள்ளவும், அடிப்படை உரிமைகள் மற்றும் தனி மனித சுதந்திரத்தினை மதிக்கவும், சமூகத்தில் உண்மை, நீதி மலரவும் வழி சமைக்கின்றார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மை குறித்த நமது அக்கறை தொடர்கிறது. சுதந்திரமான விசாரணைக்கான முயற்சிகளுக்கு பொறுப்பான அனைவரையும் ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இறை தயவையும், அமைதியையும், மகிழ்ச்சியையும் பெறும் இறை மக்களாகிய உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களும், ஆசீர்களும் உரித்தாகுக.

## வத்திக்கான் பெருங்கோவிலில் கிறிஸ்து பிறப்பை சித்தரிக்கும் குடில்



வத்திக்கான புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் அமைதி மற்றும் நம்பிக்கையின் அடையாளங்களாக அமைக்கப்பட்டு வந்த கிறிஸ்து பிறப்பை சித்தரிக்கும் குடில் மற்றும் கிறிஸ்மஸ் மரம் ஆகியவற்றை திறந்துவைக்கும் நிகழ்வு 9ஆம் திகதி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட வத்திக்கான் நகர நிர்வாகத் தலைவர் கர்தினால் Fernando Vérgez Alzaga அவர்கள் இயேசு பிறந்த பெத்லகேம் பகுதி வன்முறை மற்றும் போர்ச்சூழலால் நிரம்பியுள்ள நிலையில் நாம் அனைவரும் இடையர்களாக மாறி இயேசுவே எம் சகோதரரென அறிவிக்க அழைக்கப்படுகின்றோம் என்றும் தெரிவித்தார். புனித பிரான்சிஸ் அசிசியார் அவர்கள் 1223 ஆம் ஆண்டு இயேசு பிறந்த இடமான பெத்லகேம் போன்று இத்தாலியிலும் குடில் அமைத்து கிறிஸ்து பிறப்பைக் கொண்டாட வேண்டுமென்ற நோக்கோடு உரோமிலிருந்து அசிசிக்கு செல்லும் வழியிலிருந்த கிரேச்சோ என்ற மலைப்பகுதியில் ஒரு குடிலை உருவாக்கினார். வைக்கோல்களால் நிரப்பப்பட்டு, மாடு, கழுதை போன்ற விலங்கினங்கள்கொண்டு வரப்பட்டு, மாட்டுத்தொழுவம்போல் அப்பகுதி உருவாக்கப்பட்டது.

## அன்னை தெரேசா அமைதி இல்லத்தில் கிறிஸ்து பிறப்பு நற்செய்தி பகிர்வு

கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக்கல்லூரி அன்னை திரேசா சமூகப்பணி மன்றத்தினால் கோப்பாய் அன்னை தெரேசா அமைதி இல்லத்தில் முன்னெடுக்கப்பட்ட கிறிஸ்து பிறப்பு நற்செய்தி பகிர்வு நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அருட்பணி கு.குயின்சன் அடிகளாரின்களின் வழிகாட்டலில் அன்னை தெரேசா அன்புக் கன்னியர் அமைதி இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் முதியோர்களுடன் இவ் ஒன்றுகூடல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அருட்சகோதரர்களினால் நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டு கரோல்பாடல்கள் இசைக்கப்பட்டு சுவையான சிற்றுண்டிகள், மற்றும் 'சவேரியார் பணிஸ்' என்பனவும் பரிமாறப்பட்டன.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## என் கேள்விக்கென்ன பதில்!






அருட்பணி செ. அன்புராசா

*(மரினா, கிளிநொச்சி)*

**கேள்வி: இன்றைய விலைவாசிகளோடு எப்படிக் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுவது என்று தெரியவில்லை. இப்படியான ஒரு நிலைமையில் கிறிஸ்மஸை எப்படிக் கொண்டாடுவது?**

**ப:** மரினா, பாலஸ்தீனாவில்தான் நம் மீட்பராகிய இயேசு பிறந்தார். இப்போது பாலஸ்தீனப் பிரதேசம் படுகின்ற பாட்டினைப் பார்த்திருப்பீர்கள் என நம்புகின்றேன். மிகமிக மோசமான வகையில் அப்பூமி வன்முறையைச் சந்தித்திருக்கின்றது. விமானப்படைத் தாக்குதல்களாலும் எறிகணை வீச்சுக்களாலும் மாடிக் கட்டடங்கள் எல்லாம் மண்மேடுகளாகக் காட்சி தருகின்றன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் உட்படப் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இச்சூழ் நிலையிலும் பாலஸ்தீனர்கள் இவ்வாண்டு கிறிஸ்மஸைக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கின்றார்கள்! இற்றைக்கு 2023ஆண்டுகளுக்கு முன்னர், இயேசு பெத்தலகேமில் பிறந்தபோது எப்படிக் கொண்டாடப்பட்டதோ அதேபாணியில், மின்சாரமின்றி, போதிய உணவின்றி, குடிக்க நல்ல தண்ணீரின்றி, வசதி வாய்ப்புக்கள் இன்றி வன்முறைச் சூழலில் மிக மிக எளிமையில், மிகமிக அமைதியில், எவ்வித ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமுமின்றிக் கொண்டாட எண்ணியிருக்கின்றார்கள். நான் நினைக்கின்றேன்: இத்தகைய மனப்பான்மையோடு கிறிஸ்துபிறப்பு விழா கொண்டாடப்பட முடியும். உண்மையில், இப்படித்தான் இவ்விழா கொண்டாடப்படவேண்டும். ஆனால், வியாபார உலகம் இவ்விழாவின் உண்மைத் தன்மையை விழுங்கிவிட்டு ஆடம்பரத்தால் அணிசெய்து வைத்திருக்கின்றது.

நம் நாட்டுச் சூழலில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கும், அரசியல் கைதிகளுக்கும், நில இராணுவ ஆக்கிரமிப்புக்கும், பலதரப்பட்ட அடக்குமுறைக்கும் நீதி கிடைக்காத சூழலில் பாலஸ்தீனர்களிடமிருந்து நாமும் கற்றுக்கொண்டு கிறிஸ்மஸைக் கொண்டாடத் துணியலாம்! ஆக, இவ்விழாவை உண்மையான மனமகிழ்வோடும் மனநிறைவோடும் ஏழ்மையில், எளிமையில், அமைதியில் 2023 ஆண்டுகளுக்கு முன் கொண்டாடப்பட்ட சூழமைவில் - மனநிலையில் கொண்டாட அரிய வாய்ப்பைத் தந்துள்ளது இவ்வாண்டு! ஆகவே மரினா, அமைதியின் மீட்பரை வரவேற்க அமைதியில் எளிமையில் கொண்டாட ஆயத்தமாவோமா?

*(ரதி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: படித்தவர்கள், புத்திஜீவிகள் என மூளை-சாலிகள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் வெளியேற்றம் என்ன தாக்கத்தை நாட்டில் ஏற்படுத்தப் போகின்றது?**

**ப:** ரதி, மூளைசாலிகளின் வெளியேற்றம், நமது மூளை-களை வேற்றுநாடுகள் பயன்படுத்த, முண்டங்களை நமது ஆட்சியாளர்கள் பயன்படுத்துவார்கள் எனக் கொள்ளலாம்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: விலைவாசி உயர்வும் வரி அறவீடும் மக்களை மிகமோசமாக வருத்தப்போகின்றன. மீண்டும் பொருளாதாரச் சரிவுநிலை ஏற்படுமா? அப்படி ஏற்பட்டால், எப்படி இந்நாடு மீளப் போகின்றது?**

**ப:** யோசப், மிக விரைவில் நாட்டில் நடைபெறப் போகும் நிலைமைகளை சமிக்ஞை ஒலியாக எழுப்பியிருக்கின்றீர்கள். நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு விலைவாசி உயர்வும் வரி அறவீடும் எந்த வகையிலும் பாதிப்பையோ தாக்கத்தையோ ஏற்படுத்தப் போவதில்லை! ஆனால், சாதாரண ஏழை மக்களை இது மிகமிக மோசமாக வருத்தப் போகின்றது என்பது மட்டும் தெளிவாய்த் தெரிகின்றது. இந்நாடு மீள்வதற்கான ஒரே-வழி அதிகாரப் பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வைக் காண்பதுதான். இதன் வழியாக இம்மண்ணைச் சேர்ந்த அதேவேளை வெளிநாட்டு முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்ய வைப்பதன் ஊடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதும் அன்னியச் செலாவணியைப் பெருக்குவதன் ஊடாகவும் பொருளாதாரச் சரிவைச் சீர்செய்யலாம். இதனை அதிகார பீடம் செய்யாது, செய்ய நினைத்தாலும் பௌத்த மேலாதிக்கம் இப்போதைக்கு அனுமதிக்காது. அப்படியானால், நிலைமை பரிதாபத்துக்குரியதுதான்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: 'என் கேள்விக்கென்ன பதில்' அசத்தலாய்ப் போகின்றது. எப்படி, இப்படியெல்லாம் யோசிக்கின்றீர்கள் என்று ஒவ்வொரு தடவையும் உங்கள் பதில்களை வாசித்துவிட்டு சிந்திப்பதுண்டு! எப்படி?**

**ப:** "எப்படி, இப்படி?" என்று கேட்கின்றீர்கள்! 'இப்படி, எப்படி?' என்றுதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கின்றேன், ஆனந்தன்!

---

**என்அன்பு மாணவச் செல்வங்களே,**

**இன்றைய கால கட்டத்தில் உங்களது சீரான வாழ்வை சீர்குலைப்பதற்காகப் பல்வேறுபட்ட விசக் கிருமிகள் உருவெடுத்து வருவதைக் கண்டு, பேசா மடந்தையாக நான் வாழ விரும்பவில்லை. ஆட்கொள்ளும் கலாசாரத்தைத் தடைபோட நாளும் பொழுதும் வேலி போடுவது அவசியமாகும். நச்சு வலயத்திற்குத் தீனி போடும் வட்டம் பரவவிடாது தடுப்பது எம் எல்லோரதும் கடமையாகும். மாணவர்களாகிய நீங்கள் மகிழ்வோடு வாழ, வளர, கற்க, கனிவுடன் களிப்புற, நற்சூழல் உருவாக்கத்திற்கு வித்திட முன்வருவது இன்றைய காலத்தின் தேவையாகும். போதனையில் புள்ளிகள் நூறு பெற்று, சாதனையில் பூச்சியம் பெறும் கல்வி முறைமைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.**

அருட்பணி வின்சன் பற்றிக்

**இன்று, ஆன்மீக வழிகாட்டல் பற்றிக் கற்றுக் கொள்வோம்.**


எங்களுடைய உண்மையான அடையாளப்படுத்தல் கடவுளின் குழந்தையாக இருப்பதாகும். இந்த அடை யாளமே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது. நாம் இதனை ஏற்று, ஒழுங்குபடுத்தி வாழும்பொழுது பெருமகிழ்வு எம்மிடையே காணப்படும். எமது அடிப்படை அடையாளப்படுத்தலை வலுப்படுத்தும் சந்தர்ப்பமாக அது வரும்பொழுது எமது வாழ்வு இனிதே அமையும். ஆன்மீக வழிகாட்டல் எமக்குத் தேவைப்படுகின்றது. எம்மை உண்மையான அடையாளப்படுத்துவதில் நங்கூரமிடும் ஆட்களே தேவைபப்படுகின்றார்கள். கடவுள் உறையும் அந்த ஆழமான இடத்தில் உலகப்போக்கு முற்றாக முறியடிக்கப்பட்டிருக்கும்.

கடவுளின் குழந்தையாக ஆழ்ந்த இடத்தில் நாங்கள் வேரூன்றியது நீண்ட காலமாக எங்களுக்குத் தெரியாதிருந்ததால், எங்களைத் தொடமுடிந்த ஒரு சிலர் மூலமாகச் சடுதியாகப் பெருமளவு சக்தியைப் பெறலாம். அவர்கள் எங்களது அடையாளத்தின் ஒரு பகுதியானார்கள். இனி அவர்கள் இல்லாமல் நாங்கள் ஒருபோதும் இருக்கவியலாது. அவர்களால் அந்தத் தெய்வீக வலுவூட்டலை மேற்கொள்ள இயலவில்லை. மேலும், நாங்கள் கைவிடப்பட்டதை உணர்ந்தோம். ஆனால், அந்தக் கைவிடப்பட்ட அனுபவமே, கடவுளின் குழந்தை என்ற உண்மையான அடையாளத்திற்கு மீண்டும் இட்டுச் சென்றது.

எங்களிலுள்ள அந்த ஆழமான இடத்தில் கடவுள் மட்டுமே வாழ முடியும். அது பாதுகாப்பு உணர்வைத் தருகின்றது. ஆனால், எங்களது புனித புள்ளியிலிருந்து எங்களைத் தப்பி ஓடச்செய்ய மற்றவர்களை அனுமதிப்பது, வேதனைக்கு உள்ளாக்குவது ஆபத்தானது. எங்களது ஆழமான, மறைந்த சுயத்தையும் உலகினால் குற்றம் சாட்டப்பட்ட எங்களது பகிரங்க சுயத்தையும் மீள் இணைப்பதற்குக் கூடுதலான காலமும் கட்டுப்பாடும் தேவைப்படுகின்றது. படிப்படியாக நாங்கள் தொடர்புபடுத்தப்படுவதை உணர ஆரம்பிப்பதோடு, கடவுளின் குழந்தையாக நாங்கள் உண்மையில் உள்ளவாறே முழுமையாவது சாத்தியமாகும். எங்களது உண்மையான விடுதலை வெளிப்படும்.

---

## மணிக்கு மணிவிழா



அன்றொரு நாள் ....
யாழ் மண் குளிர்ந்திட
யாழ் திருஅவை வளர்ந்திட
யாழ் மக்கள் மனம் மலர்ந்திட
கோதுமை மணியொன்று
பணிக்குருவெனத் தன்னை அர்ப்பணித்து
கனிதரும் திராட்சையெனப் படர
மாநிலம் மகிழ்ந்ததுவே!
பணிக்குருத்துவத்தின் பணிக்குருவே!
வாழ்வதற்காக அல்ல
வெல்வதற்காகவே தேவ அழைப்பு
என்பதைக் கற்றவரும் நீர் தான்
எமக்குக் கற்பித்தவரும் நீர்தான்
குருவென அருட்பொழிவு பெற்ற நீர்
ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டு
தேவமாடத்தின் தெய்வ தரிசனமானீர்
யாழ் மன்னாரின் இணையற்ற இதயங்களை
வரிசைப்படுத்த முனைந்தால்
உங்கள் பெயரைச் சொல்லித்தான்
முதல் விரலை மடிக்க வேண்டியுள்ளது
உங்கள் உள்ளம் உண்மையானர்
உங்கள் வாக்கு இனிமையானது
உங்கள் செயல் தூய்மையானது
உங்கள் வாழ்வு தெய்வீகமானது
நற்செய்திப் பணிக்கென அடி பதித்தீர்
நற்செய்தியாகவே வாழ்ந்தீர்.... வாழ்கின்றீர்...
தமிழர் வாழ்வின் உக்கிர கட்டத்தில்
தலைநிமிர்ந்து பணிபுரிந்த உத்தமர் நீங்கள்
நீதியின் குரல்வளை திருகப்பட்டு நாம் திணறிய வேளை
நீதிகேட்டு உமது குரல் ஓங்கி ஒலித்தது
ஆன்மீகத் தலைவர் தொட்டு
அரசியல் பிரமுகர் வரை உம்
அடிதொட்டு நின்றதை
அகிலமே அறியுமன்றோ
ஆதலால் தான் 'நல்லாயன் நானே'
என்ற ஆண்டவன் குரலை
உம்மில் நாங்கள் கேட்க முடிந்தது
இறைபணி பொதுப்பணி இணைத்து
இருபணியும் ஒருசேர உழைத்து
இடர்பலவரினும் எதிர்த்து
சுடர்பட்ட பனையாக உயர்ந்து
இறைவார்த்தையால் இயேசு காவியமாய் விரிந்து
மறைவாழ்வில் அறுபதாண்டுகள் நிலைத்து
மணிவிழாக் காணும் மணிக்குருவே
நீங்கள் சூடிய மகுடங்கள்
வைரமாய் ஒளிர்கிறதே
நீங்கள் நாடிய சேவைகள்
மணியாய் ஒலிக்கிறதே
நீடிய நலத்துடன் வற்றாத இறையருளில்
நாள் போல் வாழ்க என
நாமெல்லாம் வாழ்த்துகின்றோம்
மரியன்னை மகனாக
மரிமகன் சீடனாக
மக்களின் தந்தையாக
நல்ல வண்ணம் வாழ்க! வாழ்க
வல்ல இறை வரம் அருள்க! அருள்க!
வானுறு மதியாய் வலம் வருக! வருக!
வற்றாத நீரூற்றாய் ஆசி தருக! தருக!

**இ.இ.வசீகரன் ( ஆசிரியர்)**

## கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# எங்களுக்கும் வெட்கம் உண்டு

‘அண்ணா, என்னை யாரெண்டு தெரியுதா? போன சனிக்கிழமை உங்கட வீட்டுக்கு நானும் என்ர கடைசி மகளும் பசிக்குது எண்டு வர, நாயைப் போல அடிச்சுத் துரத்தின அந்தப் பிச்சைக்காரன் தான் நான். உங்களோட ஒரு பத்து நிமிசம் கதைக்கோணும்: கொஞ்ச நேரம் நிப்பீங்களோ?’

சரி சரி... கெதியாச் சொல்லு, நேரம் இல்லை. ‘அண்ணா! நாங்க பிச்சைக்காரர்கள் தான். எங்களிட்ட உங்களப் போல நிறையக் காசோ, காரோ, பங்களாவோ ஒண்டும் இல்லை. அதை நான் ஏற்றுக்கொள்ளுறன். ஆனால் நாங்களும் உணர்வுகள் உள்ள மனிதர்கள் தான். எங்களுக்கும் வெட்கம், மானம், மரியாதை எல்லாம் இருக்கு. நான் இப்படியான நிலைக்கு எப்படி வந்தனான் எண்டு உங்களுக்குத் தெரி யுமா அண்ணா? எனக்குப் பிறப்பிலிருந்து வலிப்புவரும். வேலை தேடி அலைஞ்சேன் தரயில்லை. கடைசியா என்ர சகோதரங்களிட்ட போனன். அவங்களுக் கும் உங்களைப்போல மனிதாபிமானமில்லை. அதனால என்ன சொந்த தம்பியெண்டும் பார்க்காமல் கழுத்தப் பிடிச்சு வெளியில தள்ளிட்டாங்கள். நானும் என்ர குடும்பமும் இப்படித்தான் இந்த நிலைக்கு வந்தன் அண்ணா, இது என்ர பிழையா அண்ணா? நீங்களே சொல்லுங்கள்!’

நாங்களும் உங்களைப்போல பிள்ளைக ளிடம் அன்பு காட்டும் மனிதர்கள்தான். வெளியிடங் களுக்குச் செல்லும் போது மானம், மரியாதை யுடன் இருக்க வேண்டும் என ஆசைப்படும் சாதாரண உணர்வுள்ள மனிதர்கள் தான். அண்ணா, அண்டைக்கு நீங்க என்ர பிள்ளைக்கு முன்னாடி என்ன பேசேக்க, நான் உள்ளுக்க எவ்வளவு அழுதேன் தெரியுமா? உண்மை யில நான் அந்த இடத்தில நிர்வாணமாக நிண்டமாதிரி இருந்தது. ஆனால், என்ர பிள்ளை உயிர்வாழ வேணும், படிக்க வேணும் என்றதற்காகப் பொறுத்துக் கொண்டேன்.

இன்னொரு விடயம் அண்ணா, உங்களிட்ட நான் கோடிக்கணக்கான காசா அல்லது இருக்க வீடா அல்லது காரா கேட்டேன் இல்லையே? சோறு தான் அண்ணா கேட்டன். உங்களுக்கும் எங்களுக்கும் காலம் முழுவதும் ஒரே ஒரு எதிரிதான். அது ‘பசி’. அதை வெல்லத்தான் ஓடி ஓடி உழைக்கிறம். ஒரு வேளை நானும் என்ர பிள்ளையும் அந்தப் பசிய வெல்லத்தான் சோறு கேட்டனான். அதுக்கு நாயைப் போல அடிச்சுத் துரத்துறீங்க. ஆனா, உங்கட நாய்க்கு மாபிள் தட்டில நல்ல சாப்பாடு வைக்கிறீங்கள். ஏன் அண்ணா! நாங்கள் நாயைவிட கேவலமா? நாங்களும் மனிதர்கள் தான். தர முடியாது எண்டு, இல்லை எண்டு சொல்லுங்கோ நாங்கள் போயிடுவம். அதுக்காக இப்படிச் செய்யாதீங்க.‘அண்ணா! இந்த விடயத்தை என்னால சொல்ல ஏலாம இருக்கு. அவ்வளவு கஸ்ரமா இருக்குது அண்ணா! ஆனாலும் சொல்லுறன்அண்ணா. நான் அண்டைக்கு என்னோட கூட்டிக்கொண்டு வந்தது என்ர கடைசி மகள் தர்சனா. தரம் 8 இல் படிக்கிறா. போன வருடம் தான் வயதுக்கு வந்தவா. அவளை எவ்வளவு கேவலமா அசிங்கமா பேசுறீங்க. ஒரு பெண்ணிடம் கேட்கக் கூடாத கேள்விகளை அந்தச் சின்னப் பிள்ளையிடம் கேட்கிறீங்க. எவ்வளவு கேவலமான வார்த்தைகளால் பேசுறீங்க. அதுமட்டுமா பெண் பிள்ளை எண்டுகூடப் பார்க்காமல் தொட்டு அடிக்கிறீங்க. என்ன அண்ணா இதெல்லாம்?




அ.அருள்ராஜ்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி

உண்மையில் நீங்க ஒரு நல்ல அப்பாவா ஒரு முறை யோசியுங்க? உங்களுக்கும் பெண் பிள்ளை இருக்குது. அவவிடம் இப்படி ஒரு கேள்வி கேட்பீங்களா? அல்லது பேசுவீங்களா? இல்லை.

எங்களுக்கும் எங்கட பிள்ளையள் செல்வம் தான். அவள் உங்களிட்ட கேட்டது என்ன அண்ணா? ஒரு வேளை சோறு தானே அண்ணா? இதுக்கு ஏன் அண்ணா இப்படி? நாங்களும் வெட்கம், மானம், மரியாதை உள்ள மனுசர்தான். எங்களுக்கு வேறொண்டும் தேவையில்லை. எங்கள மனுசரா மதிச்சாப் போதும் அண்ணா. சரி அண்ணா கேட்டதற்கு நன்றி. அழவேண்டாம் சிந்தியுங்கள் நான் போயிற்று வாறன்.

இவற்றைக் கேட்டபொழுது என்னை அறியாமல் நான் அழுதுபோட்டேன். உடன என்ர பேஸை எடுத்து காசு கொடுத்தன். வேணாம் எண்டு சொல்லிற்று என்னைப் பார்த்து அழ காகச் சிரித்து விட்டுச் சென்றார். நான் அந்த இடத்தில் அவமானத்தை உணர்ந்தேன். மனசாட்சி உங்களுக்கு இருந்தால் நீங்களும் அழுவீர்கள்.

உண்மையில் யோசித்துப் பாருங் கள். கிறிஸ்மஸ், புதுவருடத்திற்கு வீட்டிற்கு வரும் ஏழைகள், பிச்சைக்காரர்கள் எம்மிடம் கேட்பது என்ன? ஒரு வேளை சோறு அல்லது தங்கள் பிள்ளைகளுக்கு பலகாரம். இதை விட வேறு என்ன கேட்கிறார்கள்? இருந்தால் கொடுப்போம். இல்லையென்றால் மரியாதை யாக இல்லை என்று சொல்லி அனுப்புவோம்.

ஒரு நிமிடம் நாங்கள் ஒரு வேளை உணவோ அல்லது பலகாரமோ அல்லது 200 ரூபாய் காசோ கொடுப்பதால் நாம் குறைந்து விடமாட்டோம். ஆனால் அவர்களுக்கு அது பெரும் உதவி.எனவே கிறிஸ்மஸ், புதுவருடத்திற்கு வரும் ஏழைகளுக்கு உணவு கொடுத்து, அவர்கள் பிள்ளைகளுக்கு அன்புடன் பலகாரம் கொடுத்து, அவர்களின் முகங்களில் கிறிஸ்மஸ் மகிழ்ச்சியை உற்சாகத்தைப் பார்ப்போம்.

**ஏழைகளின் சிரிப்பினில் இறைவனைக் காண்போம்.**

# தோல்விகள் எம்மை வெல்வதில்லை

பலருக்குத் தோல்வி என்பதே விஷம். தோல்வி அடையாத மனிதர்களே இல்லை எனப் பலர் எண்ணுகின்றனர். தோல்வியைக் கண்டு நம்மிலே பலர் அஞ்சுகின்றோம்? தோல்வியே வாழ்வின் முடிவு எனத் தீர்மானிக்கின்றோம்?

1914ல் பல கோடி மதிப்புள்ள தனது ஆய்வு கூடம் எரிந்த போது தோமஸ் அல்வா எடிசன் சிரித்துக் கொண்டே சொன்னார். “என்னு டைய தவறுகள் எல்லாம் எரிந்துவிட்டன” என்ன மகத்தான மனநிலை.தோமஸ் அல்வா எடிசனின் மகத்தான வெற்றிக்கு காரணம் தோல்விகள் கற்பித்த படிப்பினை களும், விடா முயற்சிகளும் என்றால் அது மிகையாகாது.

**பிறக்கும் புத்தாண்டு புத்துயிர்ப்புத் தரும் சுபீட்சமான நம்பிக்கையின் ஆண்டாக எமக்கு அமையவேண்டுமெனில் கடந்த காலத் தோல்விகளையே எண்ணி கல்லறைகளை எழுப்பாது இறைவேண்டல் ஆண்டில் வெற்றிப்படி நோக்கி மாடங்களை எழுப்புவோம்**

நன்றி : இந்த நாள் இனிய நாள்

# ஏழைகள் மட்டில் அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பு விழா



தற்காலகட்டத்திலே எமது நாட்டைப் பொறுத்த வரையில் நாம் அனைவரும் ஏழைகளாகவே கணிக்கப்படுகிறோம். கடன்களிலிருந்து மீண்டு வாழ்வோம் என்ற நம்பிக்கை அற்றுப் போன நடைப் பிணங்களாகவே எம் மாந்தர் அனைவரின் செயற் பாடு அமைந்து வருகிறது. இதற்குள் அர்த்தமுள்ள விதத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண் டாடுவது எப்படி? இக்கேள்விக்குப் பதில்கள் பல வாக இருக்கலாம். ஆனால், இங்கே நாம் ஒரே ஒரு கருத்தை மட்டும் முன்வைத்து நோக்குவோம்.

எல்லா நாடுகளிலும் கிறிஸ்து பிறப்பு விழா காலத்தில் வாழ்த்து அட்டைகளில் மகிழ்ச்சியை, அன்பை பரிமாறிக் கொள்வது என்பது மிகப் பிரபல்யமாய் உள்ளது.

அண்மைக் காலத்தில் கைபேசி வழியாகச் செய்திகளையும் படங்களையும் பரிமாறிக் கொள்வது இன்னும் பிரபலமாகி விட்டது. ஆயினும் மாட்டுத்தொழுவத்தின் தீனித் தொட்டியில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வை விளக்கும் படங்களே நமது கவனத்தை அதிகமாக ஈர்க்கின்றன.

இறைவன் விரும்பியிருப்பாரே என்றால் தனது மகன் பிறப்பதற்கு வசதிகள் நிறைந்த ஒரு வீட்டை அமைத்துக் கொடுத்திருக்கலாம். அவ்வாறே அவரது தாயை ஒரு மருத்துவராகவோ, தந்தையை பெரிய செல்வந்தராகவோ அழைத்திருக்கலாம். ஆனால், அவர் அப்படிச்செய்யவில்லை. ஏனெனில், இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் தொடக்க முதலே அவரை ஏழைகள், இல்லாதோரின் சார்பாக நிற்கும் கடவுளாகவே உலகிற்குக் காட்ட விரும்பினார். இயேசு ஓர் எளிமையான இடத்தில் பிறந்தது மட்டு மல்ல, ஓர் ஏழைக் குடும்பத்தில் வாழவும் வளரவும் தெரிந்து கொண்டார். ஓர் ஆட்டுக்குட்டியைக் கூட காணிக்கையாகக் கொடுக்க முடியாத அவரது பெற்றோர், இரு மாடப் புறாக்க ளைத்தான் பலிகாகக் கொடுத்தார்கள் என்று அறிகிறோம்.

ஏழை எளியவரை நினைத்துப் பார்க் காமலும் அவர்களுக்கு உணவு, உடை, உறை விடம் போன்ற உதவிகளைச் செய்யாமலும் பொருளுள்ள விதத்தில் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வைக் கொண்டாட முடியாது. கொண்டாட்டம் எனும் வட்டத்திற்கு வெளியே ஏழை, எளியவரை நிறுத்திவிடும் கிறிஸ்து பிறப்பு விழாக்கள் அர்த்தமற்றவையாகும்.

எனவே இக் கிறிஸ்து பிறப்புப் பண்டிகையிலே நாட்டின் வறுமை அகலுமா? என்று சொல்லி ‘வானத்தைப் பார்த்து வாயைப் பிளப்பது போல்’ அல்லாமல் அருகிலிருக்கும் ஏழை வீட்டில் ஒரு சிறு புன்னகையை உருவாக்கும் விதமாக இப் பண்டிகையைக் கொண்டாடுவோம்.

**‘ஏழை எளிய சின்னஞ் சிறியோருக்கு நாம் செய்யும் உதவியெல்லாம் இயேசுவுக்கே செய்யும் உதவியாகும்’**
(மத் 25:34-40)

நே. அன்ரனி றோபேட்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



# கன்னிமரியா - கடவுளின் தாய்

## புத்தாண்டின் விடிவெள்ளி



அருள்முனைவர் உவரி அந்தோனி

புத்தாண்டு புலரும் நேரத்தை மக்களில் பலர் வெளிப்படையாகப் பல்வேறு விதத்தில், பல்வேறு இடங்களிலும், நாடுகளிலும் தங்களுடைய பண்பாட்டிற்கேற்பக் கொண்டாடி மகிழ்கின்றனர். நம் நாட்டிலும் இன்று கிராமங்களிலும், நகரங்களிலும் எளிமையான முறையில் வீடுகளிலும், விமரிசை யாகப் பலர் இணைந்து தெருக்களிலும், விடுதிகளிலும், பங்களாக்களிலும் கொண்டாடி புத்தாண்டை வரவேற் கின்றார்கள். அதேவேளையில் நம் நாட்டில் கிறிஸ்தவர்கள். சிறப்பாகக் கத்தோலிக்க ஆலயங்களில் ஒன்றுகூடி புத்தாண்டு புலரும் நேரத்தில் கடவுளின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பிக்க செபத்திலும், திருப்பலியிலும் பங்குபற்றி மகிழ்கின்றார்கள். ஆண்டின் இறுதி நேரத்தில் இறைவன் தம் வாழ்வில் செய்த நன்மைகளுக்கு நன்றிகூறி, கடவுளின் அன்பை, பராமரிப்பை உணரவேண்டி திருப்பலியில் பங்குபெற இணைகின்றார்கள். இறையருளை நாடி வரும் நமக்கு இந்த நல்ல நாளில் கன்னி மரியா, கடவுளின் தாய் என்ற பெருவிழாவைக் கொண்டாடி, புத்தாண்டில்

மரியாவின் தாய்மைப் பிரசன்னத்தில் வாழ்ந்து, அவரின் வழித் துணையோடு நம்முடைய நம்பிக்கைப் பயணத்தை ஆண்டு முழுவதும் நமக்குத் துணையாக இருக்க வேண்டுமெனக் கொண்டாடுகின்றோம். தாயின் மடியில் குழந்தை நிம்மதியுடன் இருப்பதுபோல திருஅவையின் உறுப்பினர்கள் அனைவரும் அன்னை மரியாவின் மடியில் பாதுகாப்போடு இருந்திட இவ்விழா நமக்கு வாய்ப்பைத் தருகின்றது. எனவே, நம் அன்னை மரியாவின் சிறப்பினை சிந்தித்துப் பகிர்ந்து கொள்வோம்.

### புத்தாண்டில் இறை ஆசீர்வாதம்

புத்தாண்டின். முதல் நாளில், முதல் மணித்துளியில் ஆலயத்தில் கூடியிருக்கும் நமக்கு கடவுளின் வார்த்தை, நம்பிக்கையைத் தருகின்றது. "ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் மேல் ஒளிரச் செய்து. உன்மீது அருள் பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!" (எண் 6:24-26) என்று அறிக்கை யிட்டு இறையருளைக் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்து வோடு வாழும் தம் பிள்ளைகளுக்குக் கடவுள் தம் ஆசீர்வாதத்தையும், அருள் வரங்களையும் பொழிகின்றார். மேலும் 'உனக்கு ஆசி கூறுவோன், ஆசி பெறுவான்'(எண்.24:9) என்றும், அந்நாளில் அவர் வீட்டார்க்கும், அவருக்குரிய அனைத்திற்கும் ஆண்டவர் ஆசி வழங்கினார். (1 குறி 13:4) ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்வோர் ஆசிபெ றுவர் (திபா 40:4) என்று புத்தாண்டில் இறைவன் தம் அருளால் நம்மையும், குடும்பங்களையும், திருஅவை முழுவதையும் ஆசீரால் நிரப்புகின்றார். இந்தப் புத்தாண்டு திருப்பலிக் கொண்டாட்டமும் நமக்கு வழி வகுக்கின்றது.

புத்தாண்டில் பாலன் இயேசு பிறந்த எட்டாம் நாள் அவருக்கு 'இயேசு' என்று பெயர் சூட்டிய நாளையும் நினைவு கூருகின்றது. இப்பெயர் இறைவன் கொடுத்த பெயர். 'அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடு வீர்" (மத். 1:21) என்று புனித யோசேப்பைக் கடவுள் கனவில் தோன்றி அழைக்கின்றார். இதன் வழியில் அவருக்கும் கடவுளின் திட்டம் வெளிப்படுத்தப் படுகின்றது.

'இயேசு' என்ற பெயருக்குப் பல ஆற்றல்கள் உண்டு. அது நலம் தரும் செபம், மீட்பளிக் கும் பெயர். அப்பெயர் அவரின் ஆளுமையையும், கடவுளின் மகன் என்ற அடையாளத்தையும் வெளிப்படுத்துகின்றது. இயேசு வின் பெயர் சூட்டப்பட்ட நாளைக் கொண்டாடும் நமக்கு நம்முடைய திருமுழுக்கு நாளை நினைவுகூர்ந்து, நம் பெயரின் அர்த்தத்தையும், ஆளுமையையும், நம்முடைய அடையாளத்தையும் கண்டுணர அழைக்கின்றது. மேலும் கிறிஸ்தவர்கள் என்ற பெயருக்கேற்கு வாழப் பல வழிமுறைகளை இந்நாளில் நமக்குக் கற்றுத் தருகின்றது.

### புத்தாண்டின் விடிவெள்ளி மரியா

புத்தாண்டில் இறை ஆசீரைப் பெற்று, இயேசுவின் நாமத்தைத் தொடர்ந்து உச்சரித்திட நமக்குத் துணையாக இருப்பவர் நம் அன்னை மரியா. இவரின் மன்றாட்டு மாலையில் மரியாவை 'விடியற்கால நட்சத்திரம்' என்று போற்றிப் புகழ்கின்றோம். சூரியன் உதிக்கப் போகின்றது என்பதனை முன்னறிவிப்பது 'விடியற்கால நட்சத்திரம். அதுபோல உலகிற்கு ஒளிதரும் மாபெரும் சூரியனான இயேசுவை மரியா இவ்வுலகிற்குக் கொண்டுவருகின்றார். இந்த மகத்தான



உண்மையை வெளிப்படுத்திடப் புத்தாண்டின் முதல் நாளில் மரியா கடவுளின் தாய் என்ற விழாவைத் திருஅவை கொண்டாடி, அவரின் தாயன்பு, பராமரிப்பு மற்றும் நமக்காகப் பரிந்து பேசும் தாயாக இவ்வாண்டு முழுவதும் இருக்க வேண்டுமென வேண்டுகின்றோம். இயேசுவைப் பெற்றெடுத்து, வளர்த்து ஆளாக்கிய அன்னை மரியா நம்மையும், தம் குழந்தைகளாகப் பாவித்துப் பாதுகாக்க வேண்டி இந்நாளில் அவரை நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம்.

### அன்னை மரியா இறைவனின் தாய்

அன்னை மரியாவை நம் திருவழிபாட்டில் கொண்டாடி மகிழ்வதன் தனிச் சிறப்பு அவரின் தாய்மை தான். விவிலியத்தில் மரியா கடவுளின் தாய் என்று வெளிப்படையாகக் கூறவில்லையென்றாலும், பல இடங்களில் மரியா கடவுளின் மகனான இயேசுவின்தாய், ஆண்டவரின் தாய் என்று எடுத்து இயம்புகின்றது. 'கடவுளின் மகனாகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம்" (மாற் 1:1) என்று முதலாவதாக எழுதப்பட்ட நற்செய்தி சொல்கின்றது. மேலும் மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது அவரும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு, உரத்தகுரலில் மரியாவைப் பார்த்து "என் ஆண்டவ ரின் தாய் என்னிடம் வர நான் யார்?" (லூக்.1:43) என்று வாயார மரியாவை ஆண்டவரின் தாய் என்று அறிக்கையிட்டுப் புகழ்கின்றார். அதேபோல் மரியா ஆண்டவரின் தாய் என்பதை வானதூதரின் வாழ்த்துரையில் கேட்ட மரியா "நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1:38) என்று பதில் கூறி ஆண்டவரின் அழைப்பையேற்று, அர்ப்பணித்துத் தம்மை முழுவது மாகக் கையளித்தார்.

மரியாவும் இயேசுவைப் போலக் கடவுளின் திருவுளத்திற்காக முன்குறித்து வைக்கப்பட்டதால் கடவுள் காலம் நிறைவேறியபோது, திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்தநம்மைமீட்டுத்தம்பிள்ளைகளாக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். (கலா 4:4-5) மரியா தேர்ந்தெடுக்கப்பட்டு, இறைவ- னின் திட்டத்தில் பணி செய்ய, இறையருளுடன் வாழ்ந்து இறைவனின் தாயானார் என்றும் நமக்கு உறுதிப்படுத்துகின்றது.

இயேசுவின் வாழ்வில் மரியாவின் தாயன்பும், தியாகமும் நிறைந்துள்ளது. தான் பெற்ற மகனைப் பிறருக்காகக் கையளித்து, மகனிடம் கானாவூர்த் திருமணத்தில் பரிந்து பேசுவது, மகனை இறைபணி புரிந்திட வழிகாட்டியது. சிலுவையில் கையளித்து அவர் அருகில் நின்றது போன்ற செயல்கள் அனைத்தும் மரியாவின் தாயன்பிற்கு இலக்கணமாக அமைந்துள்ளது. மேலும் மனிதகுல மீட்பிற்காகத் தன் மகனையும், அவரோடு இணைந்து தம்மையும் முழு மையாக அர்ப்பணித்தல், தாய் என்ற முறையில் தம் மகன் இயேசுவிற்காகத் தன் தேவைகள், ஆசை கள் அனைத்தையும் தியாகம் செய்து, தம் மகன் வாழவேண்டும், வளர வேண்டுமென்று காத்திருந்தார். அத்தோடு தம்முடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் உலகத்தின் மீட்பே தமது குறிக்கோள் என்று தம் மகனோடு இணைந்திட்ட தாய் மரியாவை இந்தப் புத்தாண்டு நாள் நமக்கு முன்னி றுத்தி, நமக்காக நம்முடைய தேவைக்காக, நம்மோடு நின்று இறைவனிடம் வேண்டி நமக்கு இறையரு ளைப் பெற்றுத் தருகின்றார்.

### மரியா - கடவுளின் தாய் - பெருவிழா

திருஅவையின் தொடக்கம் முதல் இயேசுவின் பிறப்பு பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அவ்விழாவோடு அவரின் தாயான மரியாவையும் நினைவுகூர்ந்து கொண்டாடப்பட்டுள்ளது.

இயேசுவின் பிறப்பு விழாவும் மரியாவின் தாய்மையுடன் உள்ள நெருங்கிய உறவும் இவ்விழா வில் சுட்டிக்காட்டிப் போதித்து வந்துள்ளார்கள். கி.பி. 431 ஆம் ஆண்டு எபேசு நகரில் நடந்த பொதுச்சங் கத்தில் மரியா "கடவுளின் தாய்" என்று பிரகடனம் செய்தபின் மரியாவின் மாண்பும் மகத்துவமும் முன்னிறுத் தப்பட்டு, அன்றிலிருந்து மரியாவுக்குக் கிறிஸ்தவர்கள் மத்தியில் தனி மரியாதையும், பக்தி வணக்கங்களும், திருவிழாக்களும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

(தொடர்ச்சி 11ம் பக்.)

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# திருக்குடும்ப செபவாழ்வு நம் குடும்ப வாழ்வாக

ஒரு முறை மிகவும் தெய்வ பயத்தோடு வாழும் தம்பதிகளில் மனைவி தன்னுடைய விலையுயர்ந்த காதணிகளில் ஒன்றை வீட்டு வேலைகளை செய்து கொண்டு இருந்த போது தொலைத்து விட்டார். வீடு முழுவதும் நீண்ட நேரமாக தேடியும் கிடைக்கவில்லை. அதனை கண்டு பிடிக்க முடியவில்லை என்பதனால் மிகவும் கவலையடைந்து மன விரக்திக்கு உள்ளானார்.

இந்த வீடு வந்து கணவன் அவளுடைய கணவன் நாங்கள் இருவரும் முழந்தால் இட்டு இழந்த காதணியை கண்டு பிடிக்க கடவுளின் உதவி வேண்டி செபிப்போம் என்று தன்னுடைய மனைவியை அழைத்து இருவரும் கரம் கோர்த்துச் செபித்தனர். அடுத்த நாள் கணவன் தன் மனைவியை பார்த்து "அன்பே உன்னுடைய காதணிகள் கிடைத்து விட்டாதா?" எனக்கேட்டார். அதற்கு மனைவி சொன்ன பதில் மிகவும் அற்புதமான ஒன்று. "என் தொலைந்த காதணிகள் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை ஆனால் தொலைந்த காதணிகள் இல்லாமல் நான் வாழக்கூடிய ஒர் நல்ல மனநிலையை கடவுள் எனக்குத் தந்துள்ளார். என்னுடன் செபித்து இந்ந அருளைப் பெற்றுத்தந்தமைக்கு நன்றி என்றார்."

*(நன்றி Repice of Happy Marriage )*

2025 ஆண்டிற்கான யூபிலி ஆண்டைக் கொண்டாடுவதற்கு ஆயத்தமாக 2024ம் ஆண்டை இறைவேண்டல் ஆண்டாக நாங்கள் நினைவு கூர விருக்கின்றோம். இந்த இறைவேண்டல் ஆண்டில் நம்முடைய செப வாழ்வை ஆழுப்படுத்த அதிலும் குறிப்பாக இந்த திருக்குடும்ப பெரு விழாவில் அழைக்கப்படுகின்றோம்.

செபமாலையின் குரு என அழைக்கப்படுகின்ற அருட்தந்தை "பற்றிக் பேற்றன்" (Patrick peyton) கூறிய அர்த்தமுள்ள அருள் மொழிகள் "சேர்ந்து செபிக்கும் குடும்பம் சேர்ந்து வாழும்". இன்னும் அழகாக சொன்னால் சேர்ந்து செபிக்கும் தம்பதியினர் சேர்ந்து வாழ்வார்கள்.

திருமணத்தில் மிக ஆழமான உறவுக்கான வாசலை செபம் என்கின்ற திறவு கோல் திறக்கின்றது. ஆழமான ஆன்மீக ஒன்றிப்பைக் கொண்டு இருக்கின்ற திருமண தம்பதியினர் தங்கள் திருமண வாழ்வில் ஆயிரம் காலத்து பயிராக நிலைத்து மகிழ்வுடன் வாழ்கின்றனர் என ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. திருமண உறவுக்கு திருமண பிணைப்புக்கு உயிரோட்டம் கொடுத்து அதனை இன்னும் வலுப்படுத்துகின்ற உயிர்நாடி செபமாகும்.

கடவுள் அன்பில் நிறைந்தவர் அவருடைய அன்பிலே தான் தம்பதிகள் தங்கள் அன்பை பகிர்ந்து கொள்ளுகின்றார்கள். அன்பிலே வாழுகின்றனர். தம்பதியினர் தங்களுடைய திருமணத்தின் பொழுது கொடுத்த வாக்குறுதிகளை வாழவும் கடினமான காலங்களில் இணைந்து வாழவும் அவர்களின் அன்பானது கடவுளின் அன்பில் நிலைத்து இருக்க வேண்டும். தம்பதியினர் கடவுளோடு இணைந்து அவருடைய வழிகாட்டுதலை எப்போதும் செபத்தின் ஊடாக கடவுளிடமிருந்து பெற்று வாழும் போது திருமண உறவானது சரியான பாதையில் பயணிக்கின்றது. தம்பதிகள் இணைந்து செபிப்பதன் ஊடாக அவரின் பிரசன்னத்தை தங்களுடைய வாழ்விற்குள் அழைக்கின்றனர். அந்த இறை பிரசன்னமே அன்பு, அமைதி, மகிழ்ச்சி என்ற கனிகளை திருமண வாழ்விற்குள் கொண்டு வருகின்றது.

எனவே செபத்தின் ஊடாக ஒவ்வொரு நாளும் தம்பதிகள் இறைபிரசன்னத்தை வருவழைத்து கொள்ளுகின்ற பொழுது அவர்களுடைய பிணைப்பானது நாளுக்கு நாள் வளருகின்றது.

செபம் வல்லமையுடையது. செபம் ஒரு குடும்பத்திற்குள் மிகப்பெரும் ஆசீர்வாதங்களை கொண்டு வருகின்றது. தம்பதிகள் இணைந்து செபிக்கும் போது அவர்களுடைய மகிழ்வு பன்மடங்கு ஆகின்றது. கவலைகள், வேதனைகள் பகிரப்படுகின்றது. திருமணம் நிறைவை நோக்கி பயணிக்கின்றது. குடும்ப வாழ்வில் வரும் எந்த சவால்களையும் துணிவோடு சந்தித்து அதனை மேற்கொள்ள உதவுகின்றது.

C.S. லூயிஸ் கூறுகின்றார் "செபம் கடவுளை மாற்றுவதில்லை மாறாக அது என்னில் மாற்றங்களை கொண்டு வருகின்றது" செபத்திலே தம்பதிகள் ஒருவரை ஒருவர் மன்னிக்கின்றனர். அன்பு வாழ்வில் நிறைகின்றனர். எனவே தான் செபம் இல்லாத ஒரு திருமண வாழ்வு கூரை இல்லாத வீட்டிற்கு சமம் என்று சொல்லுவார்கள்.

எனவே தான் குடும்ப வாழ்வில் தம்பதிகள் ஒரு சில நிமிடங்களை என்றாலும் செபத்திற்கு என்று ஒதுக்க வேண்டும். நாளாந்த பல்வேறு செயற்பாடுகள் மத்தியில் செப வாழ்விற்கான நேரங்களை ஒதுக்கி வாழுகின்ற குடும்பங்கள் என்றும் நிறைவுடன் வாழும்.

இவ்வாறான செப வாழ்விற்கு திருக்குடும்பம் பெரும் முன்னுதாரணம் ஆகும். யேசு, மரி, சூசை என்கின்ற இந்த திருக்குடும்பம் இறை உறவில் இணைந்த பிணைந்த ஓர் குடும்பம் ஆகும். மரியன்னை எல்லாவற்றையும் மனதில் இருத்தி சிந்திந்து வந்தார் என்கின்ற ஒரு வசனமே மரியன்னையின் செப வாழ்வை நமக்கு படம் பிடித்து காட்டுகின்றது. சூசை தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் கனவுகள்ஊடாக தீர்வை கண்டு கொண்டார் காரணம் எந்த நேரமும் இறை உறவு நிலைத்து இருந்தார்.

இயேசு கருக்களில் எழுந்து செபித்தார், மலைக்கு சென்று செபித்தார் , இரவெல்லாம் இறைவனோடு வேண்டுவதோடு கழித்தார். என்கின்ற வார்த்தைகள் யேசுவின் செப வாழ்வை படம் பிடித்துக் காட்டுகின்றன. எனவே திருக்குடும்ப முன் மாதிரிகளை பின்பற்றி, இந்த செப ஆண்டில் நம் குடும்பத்தை ஒரு செப வாழவில் ஆழப்படுத்துவோம்.

### செப ஆண்டில் குடும்பங்களுக்கான பரிந்துரைகள்:

- ◆ குடும்பத்தில் செபத்தை மிக முக்கியமான ஒரு பகுதியாக ஆக்க முயற்சித்தல்.
- ◆ குடும்பத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒவ்வொரு நாளும் செபத்திற்கு என்று ஒதுக்கி குடும்ப செபமாலை, இறைவார்த்தை பகிர்வு என்பவற்றை ஊக்குவித்தல்.
- ◆ தம்பதிகள் கரங்களைகளைக் கோர்த்து தங்கள் பிள்ளைகளுக்காக நாளாந்தம் செபித்தல்.
- ◆ குடும்பத்தின் உடைய எல்லா தேவைகளையும் தனிப்பட்ட தேவைகளையும் செபத்தின் ஊடாக இறைவனிடம் சமர்ப்பித்தல்.
- ◆ இறைவன் தந்து கொடுத்த கணவனுக்காகவும், மனைவிக்காகவும், பிள்ளைகளுக்காகவும் நாளாந்தம் கடவுளுக்கு நன்றி கூறுதல்.
- ◆ செபங்களை கிளிப் பிள்ளை போல சொல்லாமல் ஆழமான இறை உறவோடு சொல்லி செபித்தல்.

அருட்பணி எம்.டேவிட்

## பகிர்தலின் மேன்மை



ஞானி ஒருவரின் சீடராக விரும்பி அவரிடம் வந்தனர். ஒருவன் பெயர் ஜீவா, மற்றவன் பெயர் தயாளன். ஞானி யின் பாதம் தொட்டு வணங்கி தமது விருப்பத்தை தெரி வித்தனர். இவர்கள் இருவரையும் நோக்கி "நான் ஒரு சோதனை வைக்கப்போகிறேன். அதிலே யார் வெற்றி பெறுகிறாரோ அவரையே என் சீடனாக ஏற்றுக் கொள் வேன்" என்றார். இருவரும் உடன்பட்டனர். ஞானியோ அவர்களிடம் நீங்கள் 30 நிமிடங்கள் வெளியே சுற்றி வர வேண்டும். எதிர்ப்படுகிற எழைகளுக்கு இயன்ற உதவிகளை செய்ய வேண்டும். யார் அதிகம் உதவி செய்கின்றாரோ அவரை என் சீடனாக்குவேன் என்றார்.

தயாளனும்ஜீவாவும்தலைவணங்கிவெளியே சென்றனர். கொஞ்ச நேரமாக எந்த ஏழையும் தென்படவில்லை. கடைசி நேரத்தில் ஒர் ஏழை மனிதனைக் கண்டனர். "ஐயா, உங்களுக்கு என்ன வேண்டும்" என விசாரித்தனர்.

"என் மகன் உடல்நலம் குன்றி இருக்கிறான். அவனுக்கு மருந்து வாங்க என்னிடம் பணம் இல்லை" என்றான். உடனே தயாளன் தன்னிடமிருந்த 500/=யும் எடுத்து முகமலர்ச்சியுடன் கொடுத்துவிட்டான். சற்று நேரத்தில் இன்னொரு ஏழை முக வாட்டத்துடன் நின்றான். "ஐயாஉங்களுக்குஎன்னபிரச்சினை" எனவினவினர். "என் மகளுக்கு புத்தகப்பை வாங்க வேண்டும் பணம் போதாதுள்ளது. விலைவாசியும்உயர்ந்துவிட்டது" என்றான். உடனே ஜீவா தன்னிட மிருந்த 500/=பணத்தில் 300 ரூபாவைஅந்தஏழைக்குகொடுத்தான். இருவரும் ஆவலுடன் ஞானியின் இருப்பிடத்திற்கு சென்றனர். ஞானியோ! "தயாளன் தான் என் சீடன்" என்றார். தயாளன் தன்னிடமுள்ளதையே கொடுத்து விட்டான். ஜீவாவோதன்னிடமுள்ளதில்ஒருபகுதியையேகொடுத்தான் என்றார். பிறருக்கு உதவி செய்யும் போது முழு மனதுடன் செய்யவேண்டும். பகிர்தல் மனப்பான்மை, பரிவு போன்ற நல்ல எண்ணங்களோடு உதவி செய்வதே நல்லது. பிறரோடு பகிர்ந்து கொள்ளும் போது அன்பு வெளிப்படுகின்றது. ஒருவர் நலனில் அக்கறை காட்டும் போது அன்புறவு உணரப்படுகிறது.

## யார் உனது மெசியா...?



ஜெ.ஜெ. எமில்ரன்

மெசியாவை அதிகமாக எதிர்நோக்கியவர்கள் யூதர்கள். மெசியாவாகப் பிறந்த கிறிஸ்து இயேசுவை அதிகமாக வெறுத்து, இனங்காண மறுத்தவர்களும் அதே யூதர்கள் தான். அமைதியையும், அன்பையும், நீதியையும், உண்மையையும் மெசியா தாங்கி வருவார் என எதிர்நோக்கியிருந்தவர்கள் இயேசுவை மெசியாவாக 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்டனர்.

நாம் ஒருவரை, ஒரு பொருளை எதிர்பார்த்து எதிர்நோக்கியிருக்கும்போது, எமது சிந்தனைக்கு மாறாக அந்த எதிர்பார்க்கப்பட்ட நபரோ பொருளோ இருக்குமெனில், தவறு அந்த எதிர்பார்க்கப்பட்ட விடயத்திலா? அல்லது எமது எதிர்நோக்கிலா? உதாரமாக ஒரு பாடசாலை மாணவன் தனது மாதா வெளிநாட்டிலிருந்து வரும்போது அவனுக்காக அவர் ஒரு தொலைபேசி வாங்கிவருவார் என எதிர்நோக்குகின்றான் என வைத்துக்கொள்வோம். ஆனால் அவனுடைய மாமா வருகின்ற பொழுது அவனுக்கு மிகவும் தேவையான சில பெறுமதியான புத்தகங்களையே வாங்கி வந்திருந்தார். இங்கே அந்த மாணவனின் எதிர்பார்ப்பு சிதறடிக்கப்படுகின்றது. ஆனால் அம் மாணவன் உணரவேண்டியது என்னவெனில்: தவறு தனது எதிர்நோக்கில் தான், அதுவும் தான் எதிர்நோக்கியிருந்த ஒரு பயனற்ற அல்லது அத்தியாவசியமற்ற ஒரு பொருளில்தான் என்பது இதே தவறைத்தான் அன்று யூதர்களும் செய்தனர். தமக்குத் தேவையானது நீதியும், உண்மையும், அமைதியும், சமத்துவமும் என்பதை உணர மறந்தனர்.

யூதர்கள் எதிர்பார்த்த மெசியா எனக்கென்னவோ இன்றைய 21ம் நூற்றாண்டில் தான் அவர்களின் தலைவராகத் தோன்றியிருக்கின்றார் எனத் தோன்றுகின்றது. தனது மக்களின் நலனிற்காக எதையும் செய்யத் துணிந்த, எந்த பாதகச் செயல்களைப் புரியவும் அஞ்சாத ஒரு உலகியல் மெசியா, தனது நாட்டைப் பலப்படுத்த சாமர்த்தியமாக அனைத்து நாடுகளையும் அடக்கியாளும் ஒரு அரசியல், லௌகீக மெசியா இந்த மெசியாவால் உலகிற்குக் கொண்டுவரப்பட்டது வன்முறை, யுத்தம், குரோதம், இனவெறி, ஆக்கிரமிப்புப் போன்ற தீச்செயல்கள் மட்டும்தான். எமது எதிர்நோக்கு பொய்த்துப்போகலாம், ஆனால் உண்மைகள் பொய்ப்பதில்லை. மெசியா இன்று எமக்காகப் பிறந்திருக்கின்றார். நீ மெசியாவை எவ்வாறு எதிர்நோக்குகின்றாய்? யூதனைப் போலவா? உண்மைக் கிறிஸ்தவனாகவா? உனது மெசியா நம்பிக்கை என்றும் உனது கதிர்நோக்கிலேதான் தங்கியுள்ளது. நன்மையைக் கொணரும் மெசியாவை எம் மத்தியிலுள்ள ஏழைகளிலும் இனங்காணுவோம்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மானிட மனங்களில் மன்னவனின் பிறப்பு ...

மதங்களைக் கடந்து
மனிதம் தேடிய
மன்னவனின் பிறப்பு
இன்று மனங்களைக் கடந்து
அவரவர் மனைகளில்
குடி கொள்கின்றது

காத்திருக்கின்றோம்
எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்
இந்தக் காலகட்டத்தில்
எம்மை மீட்க எம் மீட்பர்
எம்மிடையே பிறப்பாரா....?
என ஆவலுடன்
காத்திருக்கின்றோம்

மீட்பின் நாயகன்
எம்மை மீட்டிட வருவார் எனக்
காத்திருக்கின்றோம்
காத்திருப்புக்கள் எம்
எதிர்பார்ப்புக்களை
அதிகரிக்கக் காலங்கள்
எதிர்பார்ப்புக்களைக் கடந்த
ஏமாற்றங்களைத் தந்தது

மன்னவனின் பிறப்பு
இவ்வருடம் மனிதனிடம்
எதைக் கேட்கின்றது.......?
மண்ணுலகின் அழிவுகளைக்
காட்டுகின்றதா ....?
மானிடத்தின் ஆடம்பரங்களை
மழுங்கடிக்கின்றதா........?

எதிர்பார்த்திருக்க
நாம் என்ன செய்தோம்........?
எப்படி வாழ்ந்தோம் .........?
எதுவும் செய்யாதவர்களாய்
இருக்க நாம் எதை
எதிர்பார்த்து நிற்கின்றோம்........
எம்மவர்களின் கிறிஸ்மஸ்
செவிக்கினிய கீதங்களுடனும்

சான்டாவின் வருகையுடனும்
கரோல் சத்தங்களுடனும்
தொடங்க....
வீதிகளில் சவுக்கு மரங்களும்
ஆடம்பர உடைகளும்
ஆர்பரிப்புக் கொண்டாட்டங்களும்
எம்மை நாம் அலங்கரித்துச் செல்ல
நகைநட்டுக்கள் எம்மை மூடிக்கொள்ள
நத்தார் சோடினைகள்
பல நாம் தேடிக்கொள்ள
வெடிச்சத்தங்களுமாய்
வீதிகளில் குடிவெறியர்களுமாய்
ஆடம்பரமாய்க் கழிகின்றது
எம்மவர் கிறிஸ்மஸ்....

இந்த நத்தார் பிறப்பு
எதைக் கூறுகின்றது ...?
எம்மவரிடையே ....
எம்மனங்களுக்கிடையே ....
சிந்திப்போம்.......

மன்னவனின் எதிர்பார்ப்பு
மத்தாப்புச் சத்தங்களையோ
மாளிகைகளையோ
மாடி வீடுகளையோ அல்ல

அந்த எளிமையான
மாட்டுக்குடிலைப் போல
மானிட மனங்களின்
எதிர்பார்ப்புகளைக் கடந்த
எளிமையான மனங்களையே.......

மனம் எனும்
மாட்டுத்தொழுவங்களைத்
தூய்மையாக வைத்திருப்போம்
மன்னவன் எம்மிடையே
வந்து குடி கொண்டு
உலகத்தை மீட்டிட....

**கவி கிறேஸ்**

## கிறிஸ்துவைப் புறந்தள்ளிய கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள்...

கிறிஸ்மஸ்....
மூடிக்கிடந்த கன்னியின் உதரத்தை
தேடிவந்த உன்னத கடவுளின் பிறப்பு நாள்
மனித குலத்தை மீட்க
மனிதவதாரம் எடுத்த கடவுளின் பிறந்த நாள்
ஒட்டுமொத்த உலகமுமே மீட்புப்பெற
வானம் விட்டுப் பூமி வந்த பாலகன் பிறந்த நாள்
இருள் சூழ்ந்த உலகிற்கு - பேர்
ஒளி ஒன்று உதித்த நன்நாள்
அள்ள அள்ளக் குறையாத அன்பு
எம்மீது பொழியப்பட்ட நாள்
ஆனால்...
நம்மில் பலருக்கு இது வெறுமனே
பாடி மகிழும் நாள்
பலகாரம் சுட்டுப் பகிரும் நாள்
புத்தம் புது ஆடைகளைப் புதுசுபுதுசாய்
வாங்கி அணியும் நாள்
மது மாதுவென அனுபவித்து மகிழும் நாள்
இன்னும் சிலருக்கு இது ஒரு
பாலன் குடிலமைக்கும் நாள்
பரிசுகள் கொடுக்கும் நாள்
விடுமுறை நாள் கூட.....

ஆனால்

உண்மையில் எம் கிறிஸ்மஸ்
கொண்டாட்டங்களில்
கிறிஸ்து இருக்கிறாரா?...
அவரைப் அனுபவிக்கின்றோமா?
இல்லாவிட்டால்
புறந்தள்ளி விட்டோமா...
இந்த உலகம்
இனி ஒருபோதும் நினைத்தாலும்
இயேசு என்ற மாமனிதரைப்
பிறப்பிக்க முடியாது
இவ்வுலகில் இயேசு
ஏழையாகவோ, படிக்காதவராகவோ
ஒதுக்கப்பட்டவராகவோ,
கறுப்பினத்தவராகவோ
பிறந்து வந்தால் - நாம்
அவரை ஏற்கத் தயாராகவுள்ளோமா?
இல்லாவிட்டால்
கிறிஸ்துவைப் புறந்தள்ளி விட்டு
அவரது பிறப்பைக் கொண்டாடப்
போகின்றோமா?....

**ம.மரிய றனுஜன்**
**சவேரியார் குருத்துவக் கல்லூரி**

## மீண்டும் பிறப்பாயா?

பூமியதன் காரிருள் போக்க
புனிதபரன் உதித்த நாள் - இன்று
மாடடைக் குடில் கூரை பிடித்து
விண்மீன் ஊசலாடிப் பின்
மேலே உயர நீந்திச் சென்று
தரணியிலே ஒளி பாய்ச்ச - அன்று
உதித்தார் அமைதியின்
அரசனாய்

அன்பு என்ற மதத்தை - இந்த
ஆன்மா அந்த உலகில் நிறுவி
அடிமை நிலை மீட்டார்
இயேசு - இன்று
அடிமை நுகத்தடியின் கீழ் - எம்
ஆன்மாவைப் பறிகொடுத்து
வறுமை சுமை கழுத்தை நெரிக்க
வெறுமை என்ற நெருப்பிற்குள்
துடிக்கும் எம்மை மீட்க
மீண்டும் பிறப்பாயா?

மக்களின் மனம் என்ற வயலில்
அமைதிப் பயிரைப் பிடுங்கி
மதவெறிக் களையை
விதைக்கும்
மானிடக் கூட்டம்
மனிதம் தொலைத்த
மதங்களால்
புனித பூமியும் நரபலி ஈன்றதோ...
பல்லோரின் உரிமைகளும்

பலவந்தமாய்ப் பறிக்கப்பட
நித்தமும் வலி சுமக்கும்
அப்பாவி மக்களுக்கு
நீதி என்ற உண்மை நிலவை
காலங்கள் கடந்தும்
பொய் மேகங்கள்
மறைக்க - நீதி
மழைக்காய் ஏங்கும்
மனிதத்தை மீட்க
மீண்டும் பிறப்பாயா?

பேராசை எனும் பேய் பிடித்து
போர் வெறி கொண்டலையும்
போலித் தலைமைகளால்
- இன்று
பலிகள் எத்தனை இவ்வுலகில்
உயிரைக் கையில்
பிடித்து - இன்று
மனிதம் போகுது
மரணம் நோக்கி...
உன்னைப் போல்
ஒரு தலைமைக்காக
விண்ணைப் பார்த்தபடி - எம்
நெஞ்சு வேண்டுகின்றது
மீண்டும் பிறப்பாயா?

விடியலைத் தரிசிக்கவென
விழித்து எழும் எமக்கு
முடிவுவரை முயன்றாலும்
முடிவில்லாத சோகம் தான்
ஏட்டுச் சுரக்காய் ஆகிப் போன
எம்மவர் கனவுகள்
கேட்டும் களைத்துப் போன
எத்தனையோ கேள்விகள்
பார்த்துப் பதைத்துப் போன
பல்கோடி பயங்கரங்கள்
தேளாய் வந்து மனதில்
ஒட்டிக் கொள்ள
இனி மீளாதென்று
மாளும் மனிதத்தை
மீட்க - எம்
மனம் தனிலே மீண்டும்
பிறப்பாயா?

**ச.கிறிஸ்ரின் அபிஷன்**
**சவேரியார் குருத்துவக் கல்லூரி**

## மனக் குடில்களை நோக்கி நடப்போம்



சர்வதேசமே
பலிக்களங்களாகி
அறநெறியற்று
அமாவாசைகளாகிவிட்ட
இன்றைய
மானிடவியலின்
வாழ்க்கை
முறைகள் யாவும்
விடிவுக்கானதொரு
தேடலில்
தவித்து நிற்கின்றது

நவீன பொறிமுறை
பிரிவினைச்
சிந்தனைகளும்
பொருள் முதல்வாதப்
போட்டிகளும்
மானிடவியலுக்குள்
மலிந்து
துவம்சப்படுத்துகின்றது

பூகோள இடர்களும்
மனிதப் பகையுணர்வின்
இடர்களும் பரிதவிக்கும்
இப்பிரபஞ்சத்தில்

படைத்தவரை
மறந்து வாழ்ந்த
பரிதாபநிலை மாறிட
பாரினில் பாலகன்
புதுப் பிறப்பெடுக்க

எம் நிஜ வாழ்வில்
மனக் குடில்களை
நோக்கி நடக்க
முனைவோம்
எம்மிடையே
நல்வாழ்வுக்கான
மீட்பர்களை நாம்
இனம் கண்டு கொள்ளும்
வரைக்கும்...

**எம்.யோண் பற்றிக்**
**சுன்னாகம்**

## பாலகனை தொழுவோமே



குடில்தனில் பிதாமகன் கிறீஸ்து அரசராய்
மேதினி மகிழவே தொழுவத்தில் பிறந்தார்
விடிவெள்ளிக் கீற்றினில் வையகம் மலரவே
விளைந்த நெல்மணி வைக்கோலில் வந்தார்
மடிதனில் மேரியின் பாலகன் பட்டொளி
மேன்மையை இடையரும் கூடியே மொழிந்தனர்
கொடிமலர் சரங்களாய் பனித்துளி சொரிந்தன
கரங்களைக் குவித்து பாலகனைத் தொழுதனர்

**கலாபூசணம் கே.ஆர்.திருத்துவராஜா**

## புதிரான கேள்வியுமாய் புதியாத வாழ்வுமாய்...



மழை சுமந்து திரியும்
மேகங்களின் பயணங்கள் போல
வாழ்வின் பயணங்கள்
எல்லாம் அழகானவை தான்....

பரபரப்பாய் ஓடும்
வாழ்க்கைப் பயணமதில்
எதை நோக்கிச் செல்கின்றோம்
எங்கு செல்கின்றோம்
என்பது கேள்விக்குறி தான்...?

பிறக்கும் புத்தாண்டில் ஏதும் புதிதாய்
பிறக்காதா எனக் காத்திருக்கின்றோம்....
இதுவும் கடந்து போகும்
என எத்தனை ஆண்டுகளை
நாம் கடந்து விட்டோம்
கடந்து கொண்டிருக்கும் ஆண்டுக்குள்ளே
கடக்க முடியாமல் தவிக்கும்
எங்கள் தடங்களைத் தான்
நாம் இன்று தலைவிதி எனச்

சூடிக்கொள்கின்றோம்.....

ஏன் இந்த வாழ்க்கை
எனக்கேன் இந்த வாழ்க்கையென
அடுக்கு மொழிகளை
அடுக்கடுக்காய்ச் சூடிக்கொண்டு
அப்படியே கடக்கின்றோம்
அடுத்த ஆண்டில் .....

மாறாத நிலைகள்
மகிழாத மனங்கள்
மன்னிக்காத குணங்களில்
நாம் இருக்க
மன்னவனின் பிறப்பென்பது
வெறுமனே மார்கழி நிகழ்வாக
எமக்குள் இருக்கின்றது......

விடை அறியா வாழ்வினில்
எதை எதையோ தேடுகின்றோம்
தேடுவதும் கிடைப்பதில்லை
கிடைப்பதும் நிலைப்பதில்லை....

பிறக்கும் புத்தாண்டில்
புதிய வாழ்க்கை என்பது
புதிரான கேள்வியாய்
புரியாத வாழ்வுமாய்
என்று நாம் இருக்க

புத்தாண்டில் புதியதொரு
வாழ்க்கையென்பது
புதையல் தேடிய பயணமாய்
புதைந்துகொண்டே
எமக்குள் பிறக்கின்றது.....

**கல்கி**

## போதும் பாலகா இவ் இழி நிலைகள்

சின்னச் சின்னச் சிறகுகளோடு
சிகரங்கள் தொடத் துடிக்கும் - பட்டாம்
பூச்சிச்
சிறுவர்கள் நாங்கள்
சின்னச் சின்னப் பக்கற்றுக்களோடு -
ஆரம்பித்து
கல்நெஞ்ச மனிதர்களாய்
வீதிகளில் கவிழ்ந்து கிடக்கும் - கஞ்சாக்
கடத்தல்காரர்கள் ஆனோம்

பாடசாலைக் கல்விதனை
பாதியிலே நிறுத்திவிட்டு
பணத்திற்காய் அலைந்து தினம்
பாசம் மறந்து நிற்கும் மனிதர் நாம்
பத்து மாதம் சுமந்து பெற்ற தாயையும்
பத்திரமாய்க் காத்து வளர்த்த
தந்தையையும்
பார்க்காமல் முதியோர் இல்லம் சேர்த்து
வெளிநாட்டில் வசிக்கும்
மிருகங்கள் ஆனோம்
அன்பு, கருணை,
காருண்யம் மறந்த
ஆயுதம் தூக்கும் சமயங்களாக
மூச்சிருந்தும் பிணங்களாக - அழுகி
நாற்றமெடுக்கிறோம்.
சமய அரசியலால்
மனிதாபிமானமற்ற கொலைகளும்
அரசியல் சமயங்களால்
மனித மாண்பிழந்த
செயல்களும் - இன்றும்
நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன

பாசமென்னும் பெயரில்
துஷ்பிரயோகத்தையும்
காதல் எனும் பெயரில்
காமப் பசியையும் தீர்க்கும்

நயவஞ்சகக் காரர்கள் நாங்கள்
போதும் பாலகா - இவ்
இழி நிலைகள்

மனித மாண்பிழந்த
எம் மனங்களில் - மன்னவா
மழலை மொழி பேச வா
இருண்ட எம் இதயங்களில்
ஒளியினை ஏற்றி
ஒளி கொடுக்கும்
மனிதர்களாய் மாற்றி
மனிதர்களாய் வாழ - நீ
எம் மனங்களில் குடிகொள்ளவா...

ஓ! தெய்வக் குழந்தையே!
உன் புன்சிரிப்பில் - ஏழை
உள்ளங்கள் மகிழ
மாட்டுத் தொழுவமாம் - எம்
மனங்களில் மறுபடியும்
பிறக்க வா....

**தா.போல் றொசான்**
**சவேரியார் குருத்துவக் கல்லூரி**



## ஒடுக்குவோரின் கொடுங்கோலை ஒடித்தெறிவீர் (எசா 9:4)

குலமாந்தர் குடில் தேடி குழந்தையாய் மலர்ந்தவனே
குளிர்ந்திடும் இரவினில் தீவனத்தில் தவழ்ந்தவனே
குழப்பங்கள் அகற்றிடவே குலமகன் ஆனவனே
குவலயம் வாழ்ந்திடவே குன்றின் ஒளியாய் வாராயோ?

காரிருளில் நடப்போர் பேரொளிக்காய் ஏங்குகின்றனர்
போரெனும் பெரும் அரக்க ஆக்ரோசம் ஓங்குகின்றதே
பாரினில் மனித மாண்புகள் புதைகுழிப் புல்லாகின்றதே
பார்த்திடாயோ பரிவாய் சாம்பல் மேட்டு வாழ்வுதனை?

ஆயுதப்பெருக்கம் மாய்க்கிறதே மனித உயிர்களை
ஓயவில்லை அகந்தைமிகு ஆட்சியின் கரங்கள்
காயமுற்ற தோள்களின் சுமைகள் களையும் வியத்தகு
ஆலோசகனாய் விண்ணிலிருந்து வாராயோ?

பொருளாதாரப் போட்டிகள் பதவி மோகங்கள்
போதை ஏற்றிப் பாதையை அழிக்கும் வாலிபர்கள்
அநீதியின் ஆக்கிரமிப்பால் அடிசாயும் மக்கள்
நீதியை நிலைநிறுத்தும் செங்கோலாய் உயர்ந்திடாயோ?

ஊரெல்லாம் சாங்கிலித் தொடராகும் வாட்போர்கள்
உள்ளத்தை கிழித்தெறியும் வன்சொற்போர்கள்
பணத்தால் பிணமாகும் முறையற்ற மணக்கோலங்கள்
குணக்குன்றாய் நீயும் நிலமாந்தரிடை நிமிர்ந்திடாயோ?

ஒடுக்கும் ஆட்சியினால் முடமாகும் உரிமைகள்
விடுதலைக் கோஷங்களிலும் மலரவில்லை
உண்மைகள் நடுங்குங் குளிரில் உதித்த விடுதலை
வேந்தே கொடுங்கோலை ஒடித்திடும் புவி வீரனாய்
மிளிர்ந்திடாயோ?

சாவின் இருள் சூழ்ந்தோர்க்கு வாழ்வின் சுடர் ஒளியே
நாசம் செய்யும் நாட்டவரிடையே நடுநிலைத்தூ
தனாய் அகில மாந்தர் மனங்களில் அமைதியின்
அரசனாய் முகிலிடை மிதந்துவரும் விண்மீனாய்
விரைந்திடாயோ?

**S.M.வுளோறன்ஸ்.**
**(இளவாலை)**

## வாராயோ பாலகனே

விண்ணுலகின் ஒளியொன்று
மண்ணுலகிற்கு விடுதலை தந்திட
மரிமடிதனிலே மழலையாய்
மண்ணில் மலர்ந்ததே

பேரொளியாய் வந்துதித்த
பாலகன் உம் வரவால்
பாருலக பாவக்கறை நீங்கி
பரிசுத்தம் நிலைத்திட அருள்புரிவீர்


அதிசயங்கள் செய்யும்
அற்புத தேவன் எம் அருகில்
மழலையாய் இருப்பதையுணர்ந்து
இறக்குவோம் எம் இன்னல்களை

எமைக் காக்கும் உம் காவல்
எந்நாளும் வேண்டும் தினம்
எம்குறை நீக்கி நிறை செய்வீர்
தெய்வீக மழலைப் பாலகனே

பரம பிதாவின் சித்தத்தினால்
மனுவுருவாகி உருவானவரே
எம்மை மீட்க வாராயோ
மீண்டுமொருமுறை மழலையாய்ப் பாலகனே

**திருமதி சேரலாதன் ஜெனி [illegible]**

## நம்பிக்கையின் நங்கூரமாய் பிறந்திடு பாலகா



நம்பிக்கையின் ஒளி மண்ணில் மலர்ந்திடவே
மாந்தர் யாவரும் மாண்புடன் வாழ்ந்திடவே
காலாதி காலமாகக் காந்திருந்த மெசியா
காரிருள் போக்கிக் கதிரவனாய்ப் பிறந்திட்டார்

அமைதி மண்ணில் மலர்ந்திடவே
அன்பு உறவில் மாந்தர் நிலைத்திடவே
அருகி வரும் ஆன்மீகம் மிளிர்ந்திடவே
அரவணைத்து காத்திட பிறந்திடு பாலகா

உலக மாயைகளின் ஆதிக்கத்தில் மூழ்கியே
உண்மை நிலை அறியாத நிலையிலே
உருக்குலைந்து செல்லும் மனித நேயத்திற்கு
உயிரளிக்கும் உறவாகப் பிறந்திடு பாலகா

அடிமைத்தனங்கள் அகன்றிடவே
ஆணவம் அற்ற வாழ்வு மலர்ந்திடவே
அவலப்படும் மக்கள் துயர் துடைத்திடவே
ஆகமனதில் மீட்புக் கிடைத்திடப் பிறந்திடு பாலகா

சின்னத்திரையும் சினிமா மோகமும்
சீரழிந்து செல்லும் சிற்றின்பக் கேளிக்கைகளும்
சிந்தனை அற்ற செயல்களின் காலமதில்
சீர்படுத்தும் தூயவனாய் வந்திடு பாலகா

கைபேசியே வாழ்வு எனக் காலத்தைக் கணிப்பதிலும்
கஞ்சாவால் கடுகளவும் மீளாது
துயருற்று வாழ்பவர்களும்
கற்பனை உலகில் வாழ்ந்து மகிழும் வாழ்க்கையில்
காருண்ய தேவனாய் வந்திடு பாலகா

வெட்டும் கொத்தும் மலிந்த மண்ணதிலே
தன்நிலை அறியாது தற்கொலை மலிந்த காலமதில்
கண்ணியம் அற்ற காரியம் நிறைந்த இவ்வுலகில்
கருணையின் வடிவமாய் வந்திடு பாலகா

அர்த்தமற்ற வழிபாடும் இடம்பெறும் கொண்டாட்டமும்
அடுத்தவன் நிலை அறியாத அலங்காரமும்
அடியோடு தகர்த்திட
ஆன்மீக ஜோதியாய்ப் பிறந்திடு பாலகா

கடன் தொல்லை கழுத்தினை
நெறிக்கும் வேளைதனில்
மீற்றர் வட்டியும் மேலோங்கிச் சென்றிட்ட நேரமதில்
லீசிங் நிலையால் நிலைகுலைந்து மாந்தரிடையே
நின்மதியின் அவதாரமாய்ப் பிறந்திடு பாலகா

தெருவில் கூடும் குழுக்கள் இன்று
தேடல் அற்ற வாழ்வின் நிலையிலே
தேய்ந்து போடும் மனிதம் நிலைக்க
தேவ ஒளியாய்ப் பிறந்திடு பாலகா
இறைவேண்டல் ஆண்டில் இறைவனில் நிலைத்திட
யூபிலி மகிமையை முழுமையாய்ப் பெற்றிட
கூட்டொருங்கியக்கத் திருஅவையாய்
பயணம் தொடர்ந்திட நீயும்
நம்பிக்கையின் நங்கூரமாய்ப் பிறந்திடு பாலகா

**யே.அனுஸ்டதாஸ்.**
**மாதகல்**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## கிறிஸ்மஸ் அலங்காரப் பொருட்களும் அவற்றின் அர்த்தங்களும்

**கிறிஸ்து பிறப்பு இன்று உலகலாவிய ரீதியில் பல வண்ணங்களில் பல பரிணாமங்களில் பலராலும் கொண்டாடப்படுவது கண்கூடு. இயேசுவின் மனுவுடல் ஏற்றல் நிகழ்வானது கிறிஸ்து பிறப்பு நிகழ்வாகக் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்தவர்கள் மாத்திரமன்றி பிறமத சகோதரர்களும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். கிறிஸ்மஸ் கொண்டாட்ட காலங்களில் பயன்படுத்தப்படும் அலங்காரப் பொருட்கள் அனைத்தும் காலத்தால் உருவாக்கப்பட்டு பல நாடுகளிலும் பயன்பாட்டு வழக்கில் உலாவருவதை நாம் அவதானிக்கலாம். இவை அனைத்தும் தமக்குள் ஆழமான உட்பொருளைக் கொண்டிருப்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.**

**அவற்றுள் சிலவற்றின் உட்பொருளை நாம் எடுத்துநோக்குவோம்:**

### 1. கிறிஸ்மஸ் மரம்



பல நூற்றாண்டுகளாக வருடம் முழுவதும் பச்சையாக விளங்கிய மரங்கள் குளிர்காலத்தில் அஉத்தம் பொதிந்த அடையாளங்களாக விளங்கியதை நாம் வரலாற்றினூடாக அறிந்து கொள்ளலாம். எப்போதும் பச்சையாக உள்ள மரங்கள் தீய சக்திகளை அழிக்கவல்லது என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் காணப்பட்டது.

ஆரம்ப காலங்களில் எகிப்திய நாகரீகத்தைச் சேர்ந்தவர்கள் மரங்களையும் மரக்கிளைகளையும் தமது வீடுகளில் அலங்கரிக்கும் பாரம்பரியத்தைக் கொண்டவஉகளாக விளங்கினார்கள். இப்பாரம்பரியமானது பிற்பட்ட காலத்தில் உரோமைய ஆட்சியாளர்களால் தழுவப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. எமது கிறிஸ்தவ மதத்திற்குள் இப்பாரம்பரியமானது ஜேர்மன் தேசத்தவர்களால் 16ஆம் நூற்றாண்டில் உட்கொணரப்பட்டதாகக் கருதப்படுகிறது.

யோவான் 3:16 ஐ அடிப்படையாகக் கொண்டு முடிவில்லா வாழ்வைக் குறித்துக் காட்டும் வகையில் இம்மரமானது பயன்படுத்தப்படுகிறது. இறைவன் முடிவில்லாதவர், தன் அன்பை தமது ஒரே பேறான மகன் மூலமாக வெளிப்படுத்திய நிகழ்வே கிறிஸ்துவின் மனுவுடல் ஏற்பாகும்.

### 2. பாலன் குடில்



பாலன் குடில் இன்று அனைத்துக் கிறிஸ்தவ இல்லங்களையும், ஆலயங்களையும், ஏன் அரச, தனியார் துறை சார் நிலையங்களையும் அழகுபடுத்துவதைக் காணலாம்.

பாலன் குடில் அமைக்கும் பழக்கமானது புனித பிரான்சிஸ் அசிசியாருடைய காலத்தில் அவரால் முதன் முதலில் தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர் முதலில் தொடங்கினாலும் அதற்கான அனுமதியானது 1223 இல் திருத்தந்தை மூன்றாம் கிலேறியஸ் என்பவரால் அங்கீகரிக்கப்பட்ட தாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

### 3. கிறிஸ்மஸ் மணி



கிறிஸ்து பிறப்பின் செய்தியானது முழு மனுக்குலத்திற்கும் மகிழ்வின், களிப்பின் செய்தியாகும். எனவே தான் இச்செய்தியானது வான தூதர்களினால் முழக்கமிடப்பட்டது. இம் மணியானது முழக்கமிடுதலையும், தகுந்த காலத்தையும் குறிக்கிறது. திருப்பாடல் 100ஐத் தழுவியதாக முழு மனுக்குலத்திற்கும் இறைமகனை வழிபட அழைப்பு விடப்படுவதையும் குறிக்கின்றது. புனித பற்றிக்கினால் இப்பாரம்பரியம் பழக்கப்பட்டதாகப் பொதுவாக நம்பப்படுகிறது.

### 4. செடி வளையம்

செடி வளையத்தை வீடுகளின் முன்பாக தூங்க விடுகின்ற பழக்கமானது மேற்கத்தைய நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருவதை நாம் அறிவோம். இவ் வளையமானது முடிவில்லாவாழ்வையும் அதற்கான அடிநாதமான மறைபொருளாகியகிறிஸ்து பிறப்பு நிகழ்வையும் குறித்து நிற்கிறது. யோவான் 19:2 இல் குறிப்பிடப்படுவதைப் போன்று பாலகன் இயேசு அடையவிருக்கும் முள்முடியையும் இறைவனின் தொடர்ச்சியான அன்பின் அரவணைப்பையும் இது குறித்துக்காட்டுகிறது.



### 5. பரிசுப்பொருட்கள்



மத்தேயு 2:11 இல் மூன்று ஞானிகள் பாலகன் இயேசுவைச் சந்திக்கச் சென்ற போது பொன், தூபம், வெள்ளைப்போளம் போன்ற மூன்று பரிசுப்பொருட்களைக் கொண்டு சென்றார்கள். இதை அடிப்படையாகக் கொண்டே பரிசுப்பொருட்களை வழங்கும் பழக்கம் உருவாகியது. நாமும் கிறிஸ்து பிறப்புக் காலங்களில் பரிசுப் பொருட்களை எமது குடும்ப, உறவு, நன்பர்களுடன் பகிர்ந்து மகிழ்வது வழமை.

### 6. இனிப்புக் கோல்



மனுக்குலத்தின் நல்ல ஆயனாக பாலகன் பிறந்தார் என்ற செய்தியை வெளிப்படுத்தும் முகமாக, பாலகன் இயேசு ஒரு ஆயனாவார் என்பதைக் குறித்துக்காட்டும் விதமாகவும் இனிப்புக் கோல் பயன்படுத்தப்படுகிறது. இயேசுவே மானிடகுலத்தின் நல்ல ஆயனாவார். லூக்கா 2:8, யோவான் 10:11 போன்ற பகுதிகளில் இச் செய்திகள் எடுத்தியம்பப்பட்டிருக்கின்றன.

### 7. கிறிஸ்மஸ் தாத்தா



புனித நீக்கிலஸ் பற்றிய புராதன கதையின் அடியொற்றியதாகக் கிறிஸ்துப்பிறப்பு நாட்களில் கிறிஸ்மஸ் தாத்தா போன்று வேடமிட்டு ஆடிப்பாடுவதும் சிறிய கிறிஸ்மஸ் தாத்தா வடிவமுள்ள பொருட்களை அலங்காரப்படுத்துவதும் வழக்கமாயிருக்கிறது. இந்நிகழ்வானது கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை அயலவரோடு பகிர்ந்து கொள்ளும் கொண்டாட்டமாக அமைகிறது.

### 8. கிறிஸ்மஸ் மெழுகுவர்த்தி



கிறிஸ்து உலகின் நித்திய ஒளியாக மனுவுடல் எடுத்தார். இவ் வொளியானது விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு புறப்பட்டு வந்தது என்பதைக் குறிக்கும் விதமாக (லூக். 1:19, யோவான் 8:12). ஒளி விழாக்களும் இப்பொருள் கொண்டே கொண்டாடப்படுகிறது.

### 9. வானதூதர்கள் (சம்மனசுகள்)

**தொகுப்பு: அருட்தந்தை தே. யூட்தாஸ்**



லூக்கா 2:8-20 வரையான பகுதிகளில் பாலகன் இயேசு வின் பிறப்பின் நிகழ்வுகளின் போது வானதூதர்களின் பங்களிப்பு விவரிக்கப்பட்டு இருக்கிறது. வானதூதர்கள் இடையர்களுக்குத் தோன்றி பாலகன் இயேசுவின் பிறப்பின் நற்செய்தியைப் பறைசாற்றி மகிழ்வின் பாடலைப் பாடினார்கள்.

### 10. நட்சத்திரம்



மத்தேயு 2:2இல் பெத்லகேமின் விடிவெள்ளி மூன்று ஞானிகளையும் அழைத்து வந்து பாலகன் பிறந்த குடிலைக் காண்பித்ததை நினைவுபடுத்துவதாக நட்சத்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. இன்று பல வண்ணங்களில் ஒளியூட்டப்பட்ட நட்சத்திரங்கள் கண்கவரும் வகையில் அலங்காரப்படுத்தப்படுவதைக் காணலாம்.

### 11. கிறிஸ்மஸ் கேக்



கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை பிறரோடு பகிரும் முகமாக பல வகையான கேக் வகைகள் பரிமாறப்படுவதைக் காணலாம். இன்றைய வணியமயப்படுத்தப்பட்ட உலகில் விதம்விதமான கேக் வகைகள் அறிமுகமாவதும் இக்காலத்திலாகும்.

### 12. கறோல்ப் பாடல்கள்



லூக்கா 2:13-14 வரையான பகுதியில் வான தூதர்கள் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை "உன்னதங்களிலே" என்ற கீதத்தினூடாகவெளிப்படுத்திமகிழ்ந்தார்கள். எனவே மக்களும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை பாடல்கள், ஆட்டங்கள் ஊடாக அயலவர்களுக்கு அறிவிக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டு வருகிறார்கள்.

### 13. மின்விளக்குகள்



உள்ளத்து மகிழ்வை வெளிப்படுத்தும் வகையில் பல வண்ண மின்விளக்குகள் பயன்படுத்தப்படுகிறது. இன்று பல தரப்பட்ட வடிவங்களில் மின்விளக்குகள் வர்த்தக நோக்கில் கிறிஸ்மஸ் காலத் தில் விற்பனை செய்யப்படுவதையும் காணலாம்.

### 14. குமிழ்கள்



பலவண்ணக் குமிழ்கள் கிறிஸ்மஸ் மரத்திலும், வளை யங்களிலும் தொங்க விடப்படுகிறது.

### 15. கிறிஸ்மஸ் தாத்தா தொப்பி



கிறிஸ்மஸ் தாத்தாவின் நிறமான சிவப்பு வெள்ளை நிறங்களில் தொப்பிகளை அணிந்து மக்கள் ஆடுவதையும் பயணிப்பதையும்காணக்கூடியதாகஇருக்கிறது. புனித நீக்கிலஸ் பயணம் செய்ததை நினைவுபடுத்தும்வகையில் இது அமைகிறது.

### 16. கிறிஸ்மஸ் அட்டைகள்




கிறிஸ்து பிறப்புக் காலத்தில் கிறிஸ்மஸ் அட்டைகள் அனுப்புகின்ற முறை மிகவும் பழமையான காலம் தொட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. தமது உறவினர்கள் நன்பர்களுக்கு இவ்வட்டைகள் வாயிலாக வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ச்சியைப் பகிர்கின்றார்கள். இன்று தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இப்பழக்கமானது மருவி வருவதையும் வட்ஸ்அப், வைபர், முகநூல் போன்ற சமூகச்செயலிகள் மூலமாக இன்று படங்கள், போட்டோக்கள் போன்றவை பகிரப்படுகின்றன.

இவற்றைவிட இன்றைய உலகின் வளர்ச்சிக்குச் சமாந்தரமாக பல தொழில்நூட்ப முறையிலான வேறு பல வழிகளில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வின் அடையாளங்கள் பகிரப்படுகின்றன. மேற்கூறப்பட்டவை பாரம்பரியமான சில முறைகளாகும்.

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# கிறிஸ்மஸ் தரும் வாழ்வியல் பாடங்கள்



இயேசுவின் பிறப்பு வரலாற்றை மாற்றிய ஒரு நிகழ்வு. இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மெசியா ஓர் அமைதியின் மன்னராக, ஏனையாக, திருச்சட்டத்தையும், இறைவாக்கையும் நிறைவேற்றும் வகையில், கடவுளின் மகனாக மரியா (லூக். 1.34) என்னும் கன்னியிடம் பிறந்தார். (மத்.1:22-23). இயேசு யூதர்கள் எதிர்பார்த்த அரசியல் மெசியாவாக அல்ல: மாறாக அனைவரையும் பாவத்திலிருந்து மீட்கும் வரலாற்று இயேசுவாக வந்தார் (மத். 1:21) அந்த மெசியாவை இடையர்களும், ஞானிகளும் கண்டனர்.

எனவே இயேசு பிறந்த போது, இருந்த அரசியல் சமுதாய, சமய பண்பாட்டுப் பின்னனிகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, இன்றைய வாழ்வுக்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டிய சில வாழ்வியல் பாடங்களை இச்சிறுகட்டுரையில் காண்போம்.

**வரலாற்றுப் பின்னணி**

இயேசு பிறந்தபோது யூதர்களும், யூதரல்லாத சாமானிய மக்களும் தங்களின் எல்லா அடையாளங்களையும், பாதுகாப்பையும் இழந்து அரசியல், சமுதாய, சமய அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். இந்த அடிமைச் சூழல் வரலாற்றுப் பின்னணியை மூன்று கோணங்களிலிருந்து அணுகுவது நல்லது.

**ஒன்று :** உரோமையின் ஆட்சிப் பின்னணி:
**இரண்டு :** பெரிய ஏரோது ஆட்சியாளரின் பின்னணி
**மூன்று:** யூத சமய, சமுதாய பண்பாட்டுப் பின்னணி.

**1. உரோமையின் ஆட்சிப் பின்னணி**

கி.மு. 67 லிருந்து யூதேயா நாடு உரோமையர்களின் நேரடி அரசியல் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இதன் விளைவாக, அரசியல் ரீதியாக இரண்டு காரியங்கள் நடைபெற்றன.

**ஒன்று:** உரோமையர்களின் ஆட்சிக்குட்பட்ட நகர்களிலும், ஊர்களிலும் **'Pax Romanum'** என்று எழுதிவைத்தனர். இதன் பொருள் என்ன? உரோமையர் ஆட்சியால் அமைதி நிலவுகிறது என்பதே இதன் பொருள். அதைக் காணும் எதிரிகள் அவ்வூர்களைத் தாக்குதல் செய்யாமல் விட்டுவிட்டுப் போயினர். அதாவது: உரோமையரின் பெயரே அமைதியைக் கொண்டு வந்தது என்றே மக்களை நம்பவைத்தனர்.

**இரண்டாவது:** உரோமையில் கூட்டாட்சி முறை மாறி, முடியாட்சி முறை வந்தபோது, அகுஸ்துஸ் சீசர் ஆட்சிக்கு வந்தார். அதனால் அவரைப் பெருமைப் படுத்தும் வகையில் கிழக்காசிய நாடுகளில் உரோமை ஆதரவு ஆட்சியாளர்கள் தங்கள் நகர்களுக்குச் சீசரின் பெயரை வைத்தனர். (எ.கா.செசரியா, பிலிப்பு - செசரியா). அதுபோல அகுஸ்துஸ் சீசரின் பிறந்த நாளையும், தங்கள் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்திக் கொண்டாடினர்.

இவ்வாறு பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது அகுஸ்துஸ் சீசரை அமைதியின் மன்னர்' என்றும் அழைத்துப் பெருமைப்படுத்தினர். இவ்வகையான உரோமையர் ஆட்சியின் வரலாற்றுப் பின்னணியில் தான் விண்ணகத் தூதர் பேரணி, 'உள்ளத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக' (லூக். 1:13-14) என்று பாடினர்.

**இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்வியல் விழுமியம் என்ன?**

உரோமையர்கள் தங்களின் ஆயுதங்களால் அமைதியைக் கொண்டு வந்ததாகவும், அகுஸ்துஸ் சீசரை அமைதியின் மன்னர் என்றும் அழைத்தனர். ஆனால் இயேசு 'அமைதியின் அரசர்' அவரே உண்மையான அமைதியைத் தருபவர். அதாவது, இயேசு கடவுளுக்கு இணையான தன் நிலையை இழப்பதன் வழியாக, தன்னையே வெறுமையாக்குவதன் வழியாக (பிலி.2:5-9) ஏழைகளோடு ஏழையாகப் பிறப்பதன் வழியாக பெத்லகேமில் பிறந்துள்ள இயேசுவே உண்மையான அமைதியின் மன்னர்' என்று வானவரும் விண்ணகத் தூதர் பேரணியும் முழக்கமிட்டனர். (லூக். 2:10-14) இதையே பிற்காலத்தில் இயேசு தன் வழியாகவே அமைதி கிடைக்கும் (யோவா 16:33) என்று சொல்லி, அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்: என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல" (யோவா 14:27) என்று தன் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

**2. பெரிய ஏரோது ஆட்சியாளரின் பின்னணி**

யூதப் பெற்றோருக்குப் பிறந்த பெரிய ஏரோது (கி.மு.70) உரோமையர்களின் ஆதரவோடு கி.மு. 37 இல் யூதேயா நாட்டின் மன்னராகி, ஹஸ்மோனிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தான். தன்னை யூதர்களின் அரசர் என்று அழைத்துக் கொண்டான். கி.மு.26 இல் அந்திக்கோஸை வீழ்த்தி ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டான். அதன் நினைவாக, பெத்லகேமிற்குத் தென்மேற்காக 5 மைல் தொலைவில் உள்ள ஒரு மலையில் ஏரோதியம் (Herodium) என்னும் மிக அழகிய மாளிகை ஒன்றைக் கட்டியெழுப்பினான். (கி.மு.22-15) மேலும், தன்னை யூதர்களின் அரசன் என்று காட்டிக்கொள்ள விரும்பிய பெரிய ஏரோது, இறைவாக்கையும் திருச்சட்டத்தையும் அறிந்து கெ ாண்டு (மத். 2:4-5) இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க செயல்களைச் செய்தான்.

**ஒன்று:** எருசலேம் கோவிலை விரிவுபடுத்திப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டான். அப்பணியை அவரின் மகன் ஏரோது அந்திப்பாசும் தொடர்ந்தார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

**இரண்டு:** ஏரோதியம் என்ற இடத்தில் கட்டப்பட்ட மாளிகையை மெசியாவின் பிறப்பிற்காகத் தயாரிப்பு மாளிகையை மெசியாவின் பிறப்பிற்கான தயாரிப்பு மாளிகையாக மாற்றினான். திருச்சட்டத்தின் மீதும் இறைவாக்கின்மீதும் நம்பிக்கை கொண்டவனாக, அம்மாளிகையில் தாவீது வழியில் வந்த ஒரு கன்னிப்பெண்ணை வைத்து (எசா 7:14) காவலுக்கு அண்ணகர்களையும் வைத்தான்.இவ்வாறு தாவீது வழிமரபுக் கன்னிப் பெண் வழியாக நிகழவிருக்கும்



மெசியாவின் பிறப்பிற்காகத் தயாரித்து வைத்திருந்தான். ஆனால், அவன் எதிர்பார்த்தபடி மெசியா வசதிபடைத்த ஏரோதியம் என்னும் மாளிகையில் பிறக்கவில்லை.

**இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் வாழ்வியல் விழுமியங்கள் என்ன?**

**ஒன்று:** பெரிய ஏரோது போன்று வெளித் தயாரிப்புகள் செய்து வைத்து, அதிகாரப் போக்கும், செல்வச் செழிப்பும், குள்ளநரித் தனமும் கொண்டிருந்தால் இயேசு என்னும் மீட்பர் நம்மிடையே, நமக்குள் பிறக்கப் போவதில்லை.

**இரண்டு :** இயேசுவின் பிறப்பு இடையர்களுக்கும், ஞானிகளுக்கும் மகிழ்ச்சி தந்தது. ஆனால் ஏரோதுவுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் கலக்கத்தைக்

அருள்முனைவர் இரா.மரியடெல்லஸ்



கொடுத்தது (மத் 2:3) 2:3). எனவே, இயேசுவின் பிறப்பை நமக்கு மகிழ்ச்சி தரும் பிறப்பாக மாற்றிக் கொள்ள, நமக்குரிய பாதுகாப்பான இடங்களை விட்டு விட்டு இடையர்களைப் போலவும், ஞானிகளைப் போலவும் அவரைத் தேடிச் செல்ல வேண்டும்.

**மூன்று:** தலைமைக்குருக்களும், மறைநூல் வல்லுநர்களும் இயேசு எங்கே பிறந்துள்ளார் என்று அறிந்தும்கூட, இயேசுவைத் தேடிச் செல்லவில்லை. அவர்களின் சமய அதிகாரமும், அரசியல்-பொருளாதாரப் பாதுகாப்புகளும் இயேசுவைத் தேடிச் செல்வதற்குத் தடைகளாக மாறின,

**நான்கு:** பெரிய ஏரோது தன்னை 'யூதர்களின் அரசராக' ஆக்கிக் கொண்டான். எனினும், உண்மையான யூதர்களின் அரசர் பெத்லகேமில் பிறந்த இயேசுவே. அதையே ஞானிகள் வந்து உறுதி செய்தனர் (மத் 2:2). அதையே இயேசுவின் இறப்பின் போது, பிலாத்துவும் உறுதி செய்தார் (காண்க. யோவா 19:19-22).

**3. யூதச் சமய-சமுதாய, பண்பாட்டுப் பின்னணி**

யூதச் சமுதாயமும், சமய வாழ்வும் கலா சாரம் என்னும் பண்பாடும். பல் வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தன. அவைகளைப் பட்டியலிட்டுக் காண்போம்.

**ஒன்று:** யூதர்கள் தங்களின் இன-சமய அடையாளங்களால் தங்களை உயர்வாகக் கருதிக் கொண்டு, பிறப்பின் அடிப்படையில் பிற இனத்தவருக்கு மீட்பில்லை என்று நம்பினர்.

**இரண்டு:** தங்களையே புனித மக்களென்று கருதி, பிறரை இழிவாகக் கருதினர். மற்ற யூதர் அனைவரையும் பாவிகள் என்று கருதினர்.

**மூன்று:** குருக்களும், தலைமைச் சங்கத்தாரும் தங்களின் சமய-சமுதாய-பொருளாதாரப் பாதுகாப்புக்காக உரோமையர்களோடு சமரசம் செய்து கொண்டு, அரசியல் அடிமைகளாக இருந்த போதிலும், தாங்கள் யாருக்குமே அடிமையாக இருந்ததில்லை என்று பெருமைப்பட்டுக் கொண்டனர் (யோவா 8:33).

**நான்கு:** தலைமைக் குருக்கள் பிற இனத்தவர் வந்து கூடும் எருசலேம் கோவில் பகுதியில் கடைகள் அமைத்து வியாபாரம் நடத்தினர்.

**ஐந்து:** பிறப்பால்யூதர்களாக இருந்தாலும், செய்யும் தொழிலால் சிலர் சமுதாயத்தின் கடைநிலைக்குத் தள்ளப்பட்டனர் பாவிகளான வரி தண்டுவோர். தீட்டுப்பட்டோரான இடையர்கள்). அதாவது, ஆபிரகாம் காலம் முதல் உயர்வுக்குரியதாக இருந்த இடையர்களின் தொழில் இயேசுவின் காலத்தில் அசிங்கமான தொழிலாக மாறியிருந்தது.

**ஆறு :** நாடு. சமயம். மொழி ஆகியவற்றின்மீது பற்றுக் கொண்டவர்கள் தீவிரவாதிகளாக மாறி, ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து ஆயுதம் தாங்கிப் போராடித் தோற்றுப் போயினர் (திப 5:34-39 - தெயுதா. கலிலேயனான யூதா, பரபா).

**ஏழு:** எருசலேமிலிருந்த சடங்கு வழிக் குருத்துவ முறையை எதிர்த்து பலரும் கும்ரான் சமூகத்தை உருவாக்கினர். அவர்கள் மெசியாவின் வருகைக்காக ஒவ்வொரு நாளும் தூய்மைச் சடங்கு செய்து காத்திருந்தார்கள். இந்த மரபில் வந்த திருமுழுக்கு யோவான் 'திருமுழுக்கை' அறிமுகப்படுத்தி, மெசியாவின் வருகைக்காக மக்களைத் தயாரித்தார். *(தொடர்ச்சி 14ம் பக்கம்)*

## கிறிஸ்மஸ் சிறப்பிதழ்


# கிறுக்கன் ஏரோதும் கிறிஸ்மஸ்சார் புனிதர்களும்

கிறிஸ்து பிறந்தபோது இறை வார்த்தை வழிகாட்டும் வீண் மீனாக வானில் தோன்றியது. அந்த வீண் மீனைப் பின்பற்றிக் கீழ்த்திசையிலிருந்த வானவியல் ஞானிகள் சிலர் கிறிஸ்துவை வணங்க இஸ்ரயேல் நாட்டிற்கு வந்தனர். இடையில் விண்மீன் வழிகாட்டலிலிருந்து தவறினர். இதனால் யூதர்களிடம் விசாரித்து கடைசியில் உரோமை அரசால் யூதர்களை ஆள்வதற்கு என்று நியமிக்கப்பட்ட ஏரோது மன்னனிடம் விசாரித்தனர்: பைபிளின்படி எருசலேமிலிருந்த மன்னன் ஏரோது அரண்மனைக்குக் கீழ்த்திசை ஞானிகள் சென்று, 'யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள்". இதைக் கேட்டதும் ஏரோது அரசன் பிறந்திருக்கும் கிறிஸ்துவால் தனது அரியணைக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டதாகக் கலங்கிப் போனான். அராஜகத்தோடு அரசைக் கைப்பற்றிய ஏரோது கிறிஸ்து-மெசியா வருகையைப் பற்றிக் கேள்வியுற்று நடுங்குகிறான். குழப்பம் அடைகின்றான்.

ஆயினும் கிறிஸ்துவின் பிறப்பை உறுதி செய்தபின் தந்திரமாக 'நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந் தையை வணங்குவேன்."என்று கூறி ஞானிகளைப் பெத்லகேமுக்கு அனுப்பினான். மீண்டும் இடையில் வீண்மீன் வழிகாட்ட ஞானிகள் போய்க் குழந்தை இயேசுவைஅதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள். நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். தங்கள் பேழைகளைத்திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப்போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். எனினும் ஏரோதிடம் திரும்பிப் போகவேண்டாம் என்று கனவில் ஞானிகள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாக அவர்கள் தங்கள் நாடு திரும்பினார்கள். அந்த ஞானிகள் தன்னிடம் திரும்பி வராததால் ஏரோது கோபமடைந்தான். தன்னுடைய பதவியைக் காப்பாற்றுவது ஒன்றே அவனுடைய இலக்காக இருந்தது. ஏரோது ஞானிகளிடம் கருத்தாய்க் கேட்டறிந்ததற்கேற்பக் காலத்தைக் கணக்கிட்டுக் குழந்தை இயேசுவைக் கொல்லத் திட்டமிட்டு பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட நாட்டில் பிறந்த எல்லா ஆண்குழந்தைகளையும் கொன்றொழித்தான், எத்தனை குழந்தைகள் கொல்லப்பட்டார்கள் என்பது தெளிவாக இல்லை ஆனால் கொல்லப்பட்ட குழந்தைகள் அனைவருமே, திருச்சபையினால் மறைசாட்சிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்.

அப்பொழுது 'இராமாவிலே ஒரு குரல் கேட்கிறது. ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் இருக்கிறது. இராகேல் தன் குழந்தைகளுக்காக அழுது கொண்டிருக்கிறாள். ஆறுதல் பெற அவர் மறுக்கிறார் ஏனெனில் அவர் குழந்தைகள் அவரோடு இல்லை" என்று இறைவாக்கினர் எரேமியா (31:15-18) உரைத்தது இங்கு நிறைவேறியது. ஏரோதின் இந்தத் தீய அணுகுமுறையால் பல நிரபராதிக் குழந்தைகள் பலியானார்கள்.

இதையே மாசில்லாத குழந்தைகள் விழாவாகத் திருஅவை ஒவ்வொரு வருடமும் மார்கழி 28ம் திகதி கொண்டாடுகிறது. இந்த மாசற்றக் குழந்தைகளுக்கு விழா முதல் நூற்றாண்டிலேயே பீட்டர் கிறிசோஸ் லோகுஸ் என்பவரினால் தொடங்கிவிட்டது என்பதை வரலாறு காட்டுகின்றது.



ம.பிரான்சிஸ்க்

புனித அகுஸ்தினாரோ 'மாசற்ற குழந்தைகளின் இறப்பை விண்ணில் மொட்டுகள் மலருகின்றன" என்பார்.

கத்தோலிக்க கலைக்களஞ்சியத்தின்படி, இச்சமயத்தில் ஏரோது, 14 ஆயிரம் குழந்தைகளைக் கொன்றான் எனக் கிரேக்க திருவழிபாடு கூறுகிறது. ஆனால், சிரியா நாட்டினரின் நம்பிக்கையின்படி இவ்வாறு கொல்லப்பட்ட குழந்தைகள் 64ஆயிரம் எனவும், மத்திய கால எழுத்தாளர்களின் கூற்றுப்படி இவ்வாறு கொல்லப்பட்ட குழந்தைகள் 144ஆயிரம் எனவும் சொல்லப்படுகின்றது. இருந்த போதிலும், நவீன எழுத்தாளர்கள் இந்த எண்ணிக்கையைக் குறைத்தே சொல்கின்றனர். அன்று பெத்லகேம் ஏறக்குறைய ஆயிரம் பேரைக் கொண்ட ஒருசிறிய நகரம்தான். அவ்வாறு இருக்க இந்தப் பெரிய எண்ணிக்கையில் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள் என்கின்றனர். யூத வரலாறு ஆசிரியரான பிலாவியுஸ் ஜோசபுஸ் தன்னுடைய வரலாற்றுப் புத்தகத்தில் இந்த நிகழ்வைக் குறித்து எங்கும் குறிப்பிடாததால், ஒருவேளை இந்தக் கொடிய நிகழ்வில் நிறையக் குழந்தைகள் இறந்திருக்க மாட்டார்கள் என்று ஒரு சிலர் சொல்வர். இன்னும் ஒருசிலர் பெத்லகேமையும் அதன் சுற்றுப்புறத்தையும், அங்கு வாழ்ந்த மக்கள்தொகையையும் வைத்துப் பார்க்கும்போது 30 முதல் 35 வரை குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சொல்வர். இன்னும் சில அறிஞர்களின் கருத்துப்படி அச்சமயத்தில் ஏறக்குறைய 10 முதல் 20 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சொல்லப்படுகின்றது. பேராசிரியர் வில்லியம் எஃப். ஆல்பிரைட் அவர்கள் இயேசு பிறந்த நேரத்தில் பெத்லகேமின் மக்கள் தொகை சுமார் 300 பேர் என மதிப்பிடுகிறார். இரண்டு வயது அல்லது அதற்கு குறைவான ஆண் குழந்தைகளின் எண்ணிக்கை 06 அல்லது 07 இருக்கும் என்றும் கருத்துரைக்கின்றார். எத்தனை குழந்தைகள் கொல்லப்பட்டாலும், அவர்களின் மரணம் ஒரு பயங்கரமான அட்டூழியமாகும், மேலும் யோசேப்பு ஆண்டவரினால் கனவில் தப்பியோடுவதற்கு முன்பே எச்சரிக்கப்படாவிட்டால், இயேசு அந்த எண்ணிக்கையில் ஒரு பகுதியாக இருந்திருக்க முடியும். எனினும் ஒருகுற்றமும் செய்யாத குழந்தைகள் கொலை செய்யப்பட்டது சகித்துக் கொள்ள முடியாத படுபாதகச் செயல் தான். ஏரோது இயேசுவை தனது அரச அரியணைக்கு அச்சுறுத்தலாகப் பார்த்தான். அதனால் இயேசு அந்தப் பகுதியில் பிறந்து அங்கு இருந்த அவரின் பிரசன்ன ஒளியில் தனது இருள்வாழ்வைக் களைவதற்கு மறுத்துவிட்டான்.

இந்த ஏரோதைக் குறித்து அதே வரலாற்று ஆசிரியர் பிலாவியுஸ் ஜோசபுஸ், 'ஏரோதுக்குப் பிள்ளையாகப் பிறப்பதை விட, அவனுடைய வீட்டில் பன்றியாகப் பிறப்பது நலம்" என்பார். ஏரோது தன்னுடைய பதவிக்கு பங்கம் வந்துவிடுமோ எனப் பயந்து தன்னுடைய பிள்ளைகளைக்கூடக் கொன்றுபோட்ட ஓர் அரசன் என்கிறார். கி.மு. 35ஆம்ஆண்டு தன்னுடைய மருமகனையும்,கி.மு. 34ஆம் ஆண்டு தன்னுடைய சகோதரன் ஜோசப்பையும், கி.மு.29ஆம் ஆண்டு தன்னுடைய மனைவி மரியம்மையையும், அதே ஆண்டில் தன்னுடைய மனைவியின் அன்னை அலெக்ஸாண்ட்ரா என்பவரையும், கி.மு.25ஆம்ஆண்டில் தன்னுடைய இன்னொரு மருமகன் செஸ்டோபர் என்பவரையும், கி.மு.4 ஆம் ஆண்டில் தன்னுடைய மகன் அந்திபத்தார் என்பவரையும் கொன்றுபோட்டான் என்பதை வரலாறு எமக்குக் காட்டுகின்றது. இப்படியாக ஏரோது மன்னன் தன்னுடைய பதவியைக் காத்துக்கொள்ள, அதற்குத் தடையாக இருக்கும் யாரை வேண்டுமானாலும் கொன்றுபோடும் அரக்கனாக இருந்தான். இப்படிப்பட்டவன் இயேசுவைக் கொல்வதற்காக இரண்டு வயதுக்கு உட்பட்ட ஆண்குழந்தைகளைக் கொன்றுபோட்டதில் வியப்பேதும் இல்லை. ஏரோது நிகழ்த்திய இந்தக் குழந்தைகளைக் கொன்ற கொடிய நிகழ்வு பைபிளில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பார்வோன் மன்னன் மோசேயைக் கொல்வதற்காக ஏனைய யூதக் குழந்தைகளைக் கொன்றுபோட்டதை நினைவுக்குக் கொண்டுவரலாம் (விப 1:22). ஆனால் மோசே எப்படிப் பார்வோனின் கையிலிருந்து உயிர் தப்பினாரோ அதுபோன்று குழந்தை இயேசுவும் அவருடைய தாய் மரியாவும் யோசேப்பும் ஏரோதின் கைகளில் சிக்கிக்கொள்ளாமல் யோசேப்பு கண்ட கனவில் எச்சரிக்கப்பட்டு எகிப்துக்குத் தப்பியோடுகின்றனர்.

இன்று உலகில் இலட்சக்கணக்கான குழந்தைகள் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். கருவில் வளரும் குழந்தைகள் அழிக்கப்படுகின்றார்கள். குழந்தைத் தொழிலாளர்கள், அகதிச்சிறார்கள், மனிதவியாபாரத்துக்கும் பாலியல் வன்கொடுமைக்கும் உட்படும் குழந்தைகள், போரில் பயன்படுத்தப்படுவோர் எனப்பலவழிகளில் இன்றைய ஏரோதுக்களால் துன்புறுத்தப்படுகின்றனர். 'பெண் குழந்தைகளையும், பிற குழந்தைகளையும் கருவிலேயே அழிப்பவர்களை இன்றைய காலத்தில் வாழும் ஏரோது என்று ஒப்புமைப்படுத்தி 2011 ஆம் ஆண்டு மாசில்லாக் குழந்தைகள் திருநாளை யொட்டி, தன் கருத்துக்களை வெளியிட்ட மும்பைப் பேராயரும், இந்திய ஆயர் பேரவையின் தலைவரும், ஆசிய ஆயர் பேரவையின் பொதுச் செயலருமான கர்தினால் ஆஸ்வல்ட் கிரேசியஸ் கூறினார். அவர் மேலும் மாசில்லாக் குழந்தைகளைக் கொன்று குவித்த ஏரோதைப் போலவே தற்காலத்திலும் அப்பாவி உயிர்களைப் போக்கும் பலர் நம் மத்தியில் இருப்பது வேதனையைத் தருகிறது என்றும் கூறினார். ஏரோதைப் போலவே தங்கள் செல்வத்தையும் சுகத்தையும் தெய்வங்களாக வழிபடும் மக்களே கருக்கலைப்பு மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றங்களை இவ்வுலகில் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார் என்பதை இந்த இடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்


'தங்கள் பெற்றோர்களாலேயே கருவிலே கொல்லப்படும் ஆயிரக்கணக்கான சிசுக்கள் வடிவில், 2013ஆண்டுகளாக நம் கிறிஸ்து தினமும் கொலை செய்யப்பட்டு வருகிறார் எனவும், குடும்ப நெருக்கடி, கைவிடப்படல், வறுமை ஆகியவற்றை அனுபவிக்கும் சிறார் வடிவில் கிறிஸ்து கேலிக்கு உள்ளாகி வருகிறார் எனவும் இஸ்தான்புல் Ecumenical முதுபெரும் தந்தை முதலாம் பர்த்தலோமேயோ 2013 கிறிஸ்து பிறப்புச் செய்தியில் கூறியுள்ளார். 2013 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், சமகாலத்து ஏரோதுகளால், மனிதஉரு எடுத்த நம் கிறிஸ்து இன்றும் சிரியாவிலும், மற்றும்பிற பகுதிகளிலும் துன்புறுத்தப்பட்டு வருகிறார் என்றும், எகிப்தில் மட்டுமல்ல, லெபனான், ஐரோப்பா, அமெரிக்கா மற்றும்பிற பகுதிகளிலிருந்து கிறிஸ்து அகதியாக வெளியேறுகிறார்" என்றும் அவர் கூறியுள்ளதை இங்கு சுட்டிக் காட்டுவது சாலப்பொருத்தம்

'கருவில் வளரும் உயிர்களைக் காப்பாற்றும் வகையில், கருவுறும் ஒவ்வொரு தாயும் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று Chile நாட்டு ஆயர்கள் 2010ஆண்டு மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவில் அழைப்பு விடுத்துள்ளனர். தென் அமெரிக்காவில் உள்ள Chile ஆயர்கள் 'மாசில்லா உயிர்களுக்கான கண்ணீர்" என்ற தலைப்பில் 12 அம்சங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். இதில் கருவில் வளரும் உயிர்கள் குறித்த திருச்சபையின் கோட்பாடுகளை மக்களும், அரசியல் தலைவர்களும் உணரவேண்டுமென்று ஆயர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். Chile நாட்டின் மனசாட்சியைத் தட்டி எழுப்பும் வகையில் இந்த அறிக்கை 2010கிறிஸ்மஸ் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இது இன்று Chile நாட்டின் மனசாட்சியைத் மட்டுமல்லாமல் எமது நாட்டினதும்

(தொடர்ச்சி 13-ம் பக்)

# விளிம்பு நிலைக்கு மாறும் திரு அவையின் ஆட்சி மையம்.

Peripheralization of the Centre




**(கடந்த நவம்பர் மாதம் இடம் பெற்ற கூட்டொருங்கியக்கத்தின் (செனட்) முதலாவது அமர்வின் சில பிழிவுகள்)**

பணிப்பெண் ஆகார் தனது தலைவியிடம் இருந்து தப்பித்து ஓடுகையில் வானதூதர் பாலைவனத்தில் அவளுக்குத் தோன்றி அவளை நோக்கி நீ எங்கிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டார். என் தலைவி சாராயிடமிருந்து தப்பி ஓடுகிறேன் என்றாள். தொநூ: 16.8) எங்கிருந்து வருகிறாய் என்ற முதல் கேள்விக்கு விடை தெரியும். ஆனால் எங்கே போகிறாய் என்பதற்கு விடை தெரியாது - வான தூதர் மீண்டும் அவளைத் தலைவி வீட்டுக்குப் போகுமாறு கூறினார்.

தமது அமர்வை முடித்துக்கொண்டு செல்பவர்களுக்கு இதே வினாக்கள் எழுப்பப்படுகிறது. எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? இதுதான் எமது கேள்வியும். உரோமில் இருந்து வந்திருக்கிறோம். உரோமிற்குத் திரும்பிச் செல்கிறோம் என்று நகைச்சுவையாக பகரலாம். நிறைவான விடை - நாம் நமது வீட்டில் இருந்து வந்திருக்கிறோம். நாம் சொந்த வீட்டிற்குத் திரும்புகிறோம். ஆகாரின் விடையே எமது விடையுமாகும்.

**விளிம்பு நிலைக்கு மாறவிக்கும் திருஅவையின் முன்னெடுப்பு.**

ஆரவாரங்கள் மத்தியில் ஆச்சரியங்கள் காத்திருந்தன.

இம்மன்றம் மற்றைய சினெட்டுகளை விட வேறுபட்டது. முன்னையதில் அனைவரும் ஆயர்களாக இருப்பார்கள். இது ஆயர்கள் குறைந்த அமர்வு. முன்னையது ஒரு நிகழ்வாக அவதானிக்கப்பட்டது. ஆனால் இது ஒரு ஈடுபாடு கொண்ட அனுபவமாக இருந்தது. முன்னைய அமர்வில் முடிவுகளுக்கு முக்கியத்துவம். இது அமர்வின் நகர்த்தலுக்கே முக்கியத்துவம். தொடக்கத்திலே அனைவரும் சகோதரர்களாக அழைக்கப்பட்டு, பட்டம் பதவிகள் தவிர்க்கப்பட்டது. அனைவரும் பெற்றுக் கொண்ட திருமுழுக்கின் சமத்துவ சகோதரத்துவம் உணரப்பட்டது. திரு அவையும் அனைவருக்கும் சொந்தம் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. பங்கு பற்றிய அனைவருக்கும் வாக்குரிமை இருந்தது.

## குழு அமர்வு மூன்று நிலைகள்

**1. உரையாடல்:**

வட்டமேசையில் நேருக்கு நேர் அமர்ந்து 18 அங்கத்தவர்கள் குடும்ப உணர்வோடு உரையாட முடிந்தது.

**2. உளக்கலப்பு:**

வேறுபட்ட பின்புலம், கொடைகள், அருங்கொடைகள், திறமைகளுடன் ஒருவர் ஒருவரை தெரிந்து சிந்தனைகளை விருத்தி செய்ய உதவியது. திருமுழுக்குநீர் மானிடத்தின் கண்ணீரைத் தொடுவதாக அனைவரும் விழிப்புப் பெற்றார்கள்.

**3. ஆன்மீக அரங்கு:**

குருக்களும், பெண் துறவிகளும் கலந்து நடாத்தினது இருபால் சிந்தனைகளையும் குறித்து நின்றது மட்டுமல்ல, இறை மக்களின் சிந்தனைகளுடன் திரு அவையின் திருப்பீட மரபு வழி வந்த அமைப்புகளின் சிந்தனைகள், இறை மக்கள், அருங்கொடைகள் சங்கமிக்கும் இடமாகவும் உணரப்பட்டது.

**நடைமுறை முன்னெடுப்புகள்**

41 பக்க அறிக்கை வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டது. உறவு நிலை, மறைப்பணி, பங்கு பெறல்.

**முதல் பகுதி:**

ஒருங்கிணைப்புக் குழுவின் நோக்கு உள்ளீடு என்பது முதல் தலையங்கமாகவும், அத்துடன் இவ் அடையாள அனுபவத்துடன் அதை வாழ முயற்சிபெறல். மூவொரு இறைவனின் உரிமைப் பாட்டு உறவு நிலை அனைவருக்கும் உரித்தான கிரேக்க மரபுத் திருஅவை, மற்றும் பிற கிறிஸ்தவ அவைகளுக்கும் பகிரப்பட வேண்டும்.

**இரண்டாவது பகுதி: (மறைப்பணி)**

திருமுழுக்குப் பெற்ற அனைவரும், சீடர்கள், மறைப்பணியாளர்கள், நம்பிக்கையாளர்கள், தியாக்கோன்கள், குருக்கள், பெண்கள், அத்துடன் மாவட்ட ஆயர்கள், மற்றும் உரோமை ஆயர்களும் உள்ளடங்கும்.

**மூன்றாவது பகுதி:**

சமூகங்களை உருவாக்கல், பாய்இளைப்பு போன்ற, சகோதர உறவுகளை பலப்படுத்தல், மக்களை உருவாக்கல், அதேவேளை திரு அவை அமர்வைப் பலப்படுத்தல்.

கத்தோலிக்க திரு அவையின் வரம்புகளுக்கு அப்பால் சிந்தித்துச் செயற்படத் தூண்டி நிற்கும் அமர்வு. - இது ஆயர் உயர்பெருமன்றம் (செனடல்) என்று அழைக்கப்பட்டாலும் இது இறை மக்களின் அமர்வு. இளையோர், அத்துடன் கிரேக்க மரபுத் திரு அவையினர், பிற கிறிஸ்தவ அவைகள் - அதாவது பல்லினச் சூழலில் இருந்து வருகை தந்தவர்கள் அடங்கி இருந்ததுவேறுபட்டசவால்களைச்சந்திக்கநேரிட்டது. திருமுழுக்கினால் அனைவரும் சமத்துவ சகோதரர்களாக உணரப்பட்டார்கள். பல வேறுபாடுகளைக் களைந்து, கத்தோலிக்க திரு அவையின் வரம்புகளுக்கு அப்பால் சிந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அனைவரும் கூட்டாகப் பயணிப்பதும், கூட்டாக வளர்ச்சி அடைவதும், கூட்டு ஒருங்கியக்கத்தின் நோக்கம் அனுபவரீதியாக உணரப்பட்டது. பெண்கள் குருத்துவம், தன்னினச் சேர்வு வாழ்வு, ஆப்பிரிக்காவின் பண்பாட்டுடன் பிணைந்துள்ள பலதாரப் பழக்க நெறிகள், அரச திருமணப் பதிவிற்கு முன்னும் திருமண அருட் சாதனம் பெறாமல் கூடி வாழ்ந்தால் போன்ற விடயங்களும் திறந்த மனதுடன்பேசப்பட்டது. இதுபேசப்பட்டாலும்இறையியல்திரு அவை சட்ட நெறிகளின் ஊடாக ஆராயப்பட வேண்டியது. பாரிய மாற்றங்கள் ஊடாக உலகம் பயணம் செய்கையில், திரு அவையும் திறந்த மனதோடு சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய கடப்பாடு உண்டு.

**எங்கே போகிறோம்?**
**அடுத்து என்ன?**

ஆகார் வீடு திரும்ப வேண்டும்.
பங்குபற்றியவர்கள் வீடு திரும்ப வேண்டும்.
உள்ளங்கள் தான் வீடுகள், பங்குகள், மறை மாவட்டம், ஆயர் மன்றம், பன்னாட்டு அமர்வுகள் சிந்தித்துத் தியானித்து அமர்வின் கருத்துக்களை உள்வாங்கல்.

**விளிம்பு நிலைகள்:**

எமது இல்லங்கள், பங்கு ஆலயங்கள், அயல் மறைகள், ஏழை இறை மக்கள், நிர்வாக மையத்துள் நுழைந்துள்ளார்கள். இதுதான் திரு அவையின் மறைப்பணி மட்டுமல்ல முக்கிய அடையாளமுமாகும்.

**அருட்பணி அமிர்த யெயசேகரம்**

# கிறுக்கன் ஏரோதும்...

(10ம் பக்கத் தொடர்ச்சி..)

குறிப்பாக எமது பிரதோசங்களினதும் மனசாட்சியைத் தட்டி எழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயதேவையாகிறது.

'உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல, அவர்கள் உங்கள் மூலம் இந்த உலகிற்கு வந்துள்ளார்களே தவிர, உங்களில் இருந்து அல்ல. உங்களுடனேயே இருந்தாலும் அவர்கள் உங்களுடையவர்கள் அல்ல. அவர்களுக்கு உங்கள் அன்பை வழங்கலாமே தவிர, உங்கள் சிந்தனையை வழங்கவே முடியாது.

ஏனெனில் அவர்களுக்கான சிந்தனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களின் தேகங்களுக்கு ஓர் இல்லத்தை நீங்கள் வழங்கி இருக்கலாம் ஆன்மாக்களுக்கு அல்ல" என்பான் லெபனான் நாட்டுக் கவிஞன் கலீல் கிப்ரான். குழந்தைகள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள். எனவே அவர்கள்மீது நம்முடைய சிந்தனையைத் திணிக்காமல் அவர்களை அவர்களாகவே வாழவிட வேண்டும் என்பதுதான் கவிஞர் இங்கு செய்தியாகத் தருகின்றார்.

இயேசு, தன்னிடம் வரும் குழந்தைகளைத் தடுத்த சீடர்களைக் கடிந்துகொள்கிறார் சிறு குழந்தைகளுக்கு இடறலாக இருப்போரின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டிக் கடலில் ஆழ்த்துவது நலம் என்று சொல்கிறார்(மத்18:6). இயேசு கோபப்படும் நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும். குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்க வேண்டாம்' என்று கூறினார். (மத்:19:14). இதைவிட மேலாக 'சிறுபிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர்" என்கிறார் (மத் 18:4). இயேசுவும் தனது வாழ்நாளில் குழந்தைகள் மீதான தன் அன்பை எப்போதும் வெளிப்படுத்தியவாறே இருந்தார்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக ஜெர்மனியில் உள்ள ஒரு பாலர் பள்ளிக்கூடத்தில் பணிபுரிந்து வந்த ஆசிரியர் ஒருவர் தன்னுடைய வகுப்பறைக்குள் நுழைந்ததும் அங்கிருக்கும் மாணவர்களைத் தலைதாழ்த்தி வணங்குவார். இவ்வழக்கம் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. இதனைக் கூர்ந்து கவனித்து வந்த ஒரு பணியாளர் அந்த ஆசிரியரிடம், 'ஐயா! வழக்கமாக மாணவர்கள் தானே ஆசிரியர்களைத் தலைதாழ்த்தி வணங்குவர், ஆனால் நீங்களோ மாணவர்களைத் தலைதாழ்த்தி வணங்குகிறீர்களே, அது ஏன்? " என்று கேட்டார். அதற்கு அந்த ஆசிரியர், 'இந்த மாணவர்களிடமிருந்து பிற்காலத்தில் பெரிய பெரிய தலைவர்கள் தோன்றலாம். அப்போது அவர்களை வணங்குவதற்கு நான் உயிரோடு இருப்பேனா என்று தெரியவில்லை, அதனால் தான் நான் இப்போதே வணங்குகிறேன்" என்றார். அந்த ஆசிரியர் சொன்னதுபோன்று அந்த வகுப்பறையிலிருந்து மார்டின் லூதர் என்னும் ஒரு மிகப்பெரிய ஆளுமை தோன்றினார். இந்த மார்டின் லூதர் திருஅவையில் பெரும் மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாக இருந்தார்.

'ஒரு சமூகத்தின் வளர்ச்சி, அந்தச் சமூகம் குழந்தைகளைப் பராமரிக்கின்றது என்பதில் அடங்கியிருக்கின்றது"எனலாம். கிறிஸ்து குழந்தையாகப் பிறப்பு எடுத்ததென்பது கடவுள் என்றென்றும் நம்மோடு இருக்கிறார் என்பதையும் உணர்த்துகின்றது. கிறிஸ்து குழந்தையாகப் பிறந்ததன் வழியாகக், குடும்பங்கள் சரியான வழியில் தங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறார். மனுக்குல மீட்புக்காக இறைமகன் நம்மிடையே ஒரு குழந்தையாகப் பிறந்தார். அப்போது குழந்தைப் பருவத்திலேயே, குழந்தை இயேசுவைக் காணாதிருந்தும் குழந்தை இயேசுவுக்காக இரத்தம் சிந்திய முதல் மறைசாட்சிகள் மாசில்லா குழந்தைகள். இவர்கள் இயேசுவுக்காக மட்டுமல்ல, இயேசுவிற்குப் பதிலாய் தங்கள் உயிரை ஈந்தவர்கள். இன்று நம்மிடையே புறக்கணிகப்படும் குழந்தைகளை இந்நாளில் சிறப் பாக நினைவில் கொள்தல் அவசியமாகும். புதிய வடிவங்களில் குழந்தைகளுக்கெதிரான நிகழ்வுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவது கொடுமைகளை தடுக்க உழைப்போம். எனவே உத்தரவிடும் மனோபாவத்தை நீக்கிக் குழந்தைகளுக்கு உற்ற நண்பனாக வழிகாட்டியாக இருப்பதே இன்றைய காலக்கட்டத்தில் அவசியமாகும். குழந்தைகள் பிறப்பென்பது மிகவும் முக்கியமானது, மதிப்புமிக்கது. நம்பிக்கையூட்டுவது என்பதை நாம் உணர்ந்து இந்தக் கிறிஸ்து பிறப்புவிழாக் காலத்தை நம் வீட்டுக் குழந்தையின் பிறப்பு விழாக் காலமாக, மனுக்குலத்தின் மகத்தான விழாவாகக் கொண்டாடுவோம். இவ்வருடத்தின் இயேசுபிறப்பு விழாக்காலம் எம்மாசற்ற குழந்தைகளுக்கு உண்மையான விடுதலையைப் பெற்றுத்தரட்டும்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## அவள் பெயர் கியாரா

அது மார்கழி மாதம். மெல்லிய பனித் தூறல்கள் அழகாய் பூமிக்கு வந்து அம் மாதத்தை அலங்கரித்துக் கொள்வதுண்டு. இதமாய் வீசும் குளிர்காற்று மேனியைத் தொட்டுச் சென்று ஒரு செய்தியை காதிற்குள் வந்து சொல்லிகொண்டு சென்றுவிடும். அம் மாதத்தில் வழமைபோல் இவை அனைத்தும் நடந்து கொண்டே தான் இருந்தன. ஆனால் அவளுக்கு மட்டும் வழமைக்கு மாறுதலாய் இது அமைந்தது.

தெருக்களில் எங்கும் கிறிஸ்மஸ் சோடினைகள் ஆங்காங்கே குவிந்து கிடந்தன. கண்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் சான்டா முகமூடிகள் விதவிதமாய் வீதியெங்கும் விற்பனை செய்யப்பட்டது. கிறிஸ்மஸினை நோக்கிய வண்ணம் பரபரப்பாய் மக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். மார்கழி என்றாலே மனமகிழ்வை தரும் மாதமென மாணவர்கள் சொல்வதுண்டு. பாடசாலைகளின் நீண்ட விடுமுறையும், புதிய வகுப்பிற்கு மாணவர்கள் தம்மை ஆயத்தப்படுத்தும் மாதமாக இருப்பதால் அனைவரும் அம் மாதத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுமுண்டு.

அவளுக்கு மட்டும் இம்மாதம் பதட்டமாய், பயமுமாய் இருந்தது. நாட்கள் நகர நகர கரோல் கீதங்கள் காதுகளை ஊடுருவும் வகையில் கேட்டுக்கொண்டேயிருந்தன.

வீடுகளில் எங்கும் சவுக்கு வாசம் அவ்விடம்தனைக்கடக்கும்வழியெங்கும்கடத்திச் சென்றது. வீட்டின் கூரைகளை அலங்கரிக்கும் கலர் கலர் பல்புகளும், மதில்கள் எங்கும் பச்சை சிவப்பு, மஞ்சள் என ஒளிவீசும் மின்மினி லைட்டுகளும் அழகாய் ஒவ்வொருவருடைய வீட்டிலேயும் போடப்பட்டு அத் தெருவையே அலங்கரித்து காட்டியது. அவள் வீடும் அத் தெருவில் தான் உள்ளது. ஆனால் அன்று பெரிதான அலங்கரிப்புக்கள் எதுவும் அவள் வீட்டில் இடம் பெறவில்லை. சவுக்கு வாசனையும் வீசவில்லை. கரோல் கீதங்களும் அங்கு கேக்கவில்லை.

எல்லோரும் வியந்து பார்க்கும் வகையில் தனது வீடு ஜொலி ஜொலிக்க கிறிஸ்மஸ் சோடினைகளால் வீட்டை முன்பே அலங்கரித்து வைத்திருப்பவள், இவ்வருடம் அங்கு எந்தவித அலங்கரிப்புக்களும் இடம் பெறவில்லை. வருடம் தோறும் பிறக்கும் பாலகனுக்காய் தன் வீட்டை அலங்கரித்துக் கொண்டவள் பலவருடங்கள் கடந்து அவளை மகிழ்விக்க வரும் தன் குழந்தைக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். அவள் வயிற்றில் உதித்த அந்தப் பாலன், இந்த பூமியைப் பார்ப்பதற்குத் தன் தாயுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தது. தன் மெல்லிய கால்களைத் தன் தாய் வயிற்றில் உதைத்தபடி அவளை கொஞ்சம் வலியால் துடிக்க வைத்தது. பாவம் அவள், குழந்தையானவளுக்குத் தன் குழந்தையின் சிணுங்கல்களை வலியோடு ஏற்றுக்கொண்டு வயிற்றைத் தொட்டு ரசித்துக் கொண்டிருந்தாள். எல்லோரும் மார்கழி இருபத்தைந்தாம் திகதி இயேசு பிறப்பைக் கொண்டாட அவள் மட்டும் அந்த ஆஸ்பத்திரியில் தன் வயிற்றில் இருக்கும் குழந்தையுடன் செல்லச் சண்டைப் போட்டுக்கொண்டிருந்தாள்.

அன்று முப்பத்தொராம் திகதி, மதியம் ஒருமணி இருக்கும், அந்தப் பாலன் தன் தாயுடன் முட்டி மோதிப் பூமியைப் பார்க்க பூவாய் மலர்ந்தது. ஆணோ பெண்ணோ, கறுப்போ சிவப்போ அவள் எதுவும் அறியவில்லை. வலியின் மயக்கத்தில் அயந்து விட்டாள். மெல்லிய அழுகைச் சத்தத்தில் பிறந்த குழந்தையைத் தாய்மாமன் முதலில் கையில் ஏந்தி ரசித்துக் கொண்டிருந்தான். பிரசவ



சிறுகதை

கவி கிரேஸ்

வலியினால் துடிதுடித்தவள் மயக்கமடைந்த நிலையில் உறங்கிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் கழித்து விழித்தெழுந்து தன் பிறந்த பாலகனைக் கட்டியணைத்து, தன் மார்பில் புதைத்து, கண்வழியே கசிந்த கண்ணீரால் அக்குழந்தையை முத்தமிட்டுச் சந்தோசமாய் உரத்துச் சொன்னாள். தனக்குத் தேவதை பிறந்திருக்கிறாள் எண்டு. தேம்பி வழிந்த கண்ணீர்கள் அவளையும் அங்கு கூடியுள்ள அனைவரையும் சந்தோசத்தில் நனைத்துச் சென்றது. ஆயிரம் மத்தாப்புச் சத்தங்கள் அவளின் மனதினுள்ளே அன்று வெடித்துக்கொண்டன. களீர் களீராய் வீட்டில் தொங்கியபடி காற்றின் அசைவில் கதை பேசும் அந்த முறுக்குச் சோடினை தரும் சத்தத்தை அவள் ஆஸ்பத்திரியில் தன் குழந்தை பாலுக்கு அழும் அழுகையின் வழியே அதனை ரசித்துக்கொண்டிருந்தாள்.

மார்கழியில் வீடு முழுவதும் வீசிச்செல்லும் சவுக்குக் கிளை வாசனையின் புத்துணர்வை அவள் முலை தனில் தன் முகம் புதைத்துப் பால் குடிக்கும் தன் குழந்தையின் பால் வாசத்தில் அன்று உணர்ந்து கொண்டாள். அவளின் எத்தனையோ வருடத் தவிப்புகளுக்குத் தவமாய்ப் பிறந்த குழந்தை அவள். அவள் புதைத்து வைத்த மனக் குமுறல்களுக்கு விடுதலையளிக்கப் பிறந்த பாலனவள். அவள் கண்களில் கரைந்தோடிய கண்ணீர்களுக்கு அக்காலங்கள் எழுதிய கவிதையாய் பிறந்தவள். முணு முணுத்தப்படி பேசிக்கொள்ளும் ஊர் வாய்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முத்தாய் கிடைத்தவள். அன்று தேவதையாய், அவள் தேடிய பாலன் அவள் வயிற்றில் வரமாக பிறந்த நாள் அது. வீடுகளில் அனைவரும் கிறிஸ் மஸினை அழகாகக் கொண்டாட அவள் தன் மகளுடன் ஆனந்தமாக அந்த ஆஸ்பத்திரியில் கொண்டாடினாள். அவளுக்கு அன்று தான் நத்தார் பிறந்த தினம். பல வருடங்கள் தான் சுமந்த கனவை, அன்று வயிற்றில் சுமந்தவள், சுகமாய் இறக்கி வைத்து இளைப்பாறிய தருணம் அது.

சுற்றிவரச் சொந்தங்கள் சூழ்திருக்க, சிமிட்டிக் கொண்டு சிரித்துப் பார்க்கும் அவள் சின்னக் கண்கள் அங்கு சூழ்ந்து நின்ற அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அது வழமையாக கடக்கும் ஆண்டைப் போல அவளுக்கு மட்டும் இருக்கவில்லை.

மாடடைக்குடிலில் பிறந்த பாலகன் ஒருபுறமாய், மகிழ்வுடன் பிறந்த தேவதை மறுபுறமாய் இருக்க அவள் வீட்டில் ஒரு குழந்தை வாசம் வீசியது. சின்னச் சின்ன உடைகளால் அவள் வீட்டை அலங்கரிக்கும் வண்ணம் அவள் சிரிப்புச் சத்தம் அந்தத் தெருவையே திரும்பிப் பார்க்க வைத்தது. அவள் பெயர் தான் கியாரா. பெயருக்கேற்ற குணமுடையவள். அன்று அவள் கரங்களுக்குக் கடவுள் கொடுத்த விலைமதிப்பற்ற பரிசு அவள்.

# கிறிஸ்மஸ் தரும்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

**எட்டு:** அதைவிட மேலாக, யூதச் சமயப் பற்றும், வெளிப்பாட்டு இலக்கிய மற்றும் இறைவாக்கினர். வழி மரபில் வந்த நம்பிக்கையாளர்கள் மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர். அதிலும் குறிப்பாக, மிஷ்னா, ஹலகா மற்றும் ஹகதா போன்றவற்றின் அடிப்படையில் மெசியாவின் வருகைக்கான அடையாளங்களைப் பட்டியலிட்டுக் காத்திருந்தனர், மேலும். ஆண்டவரின் நாளில் “மெசியா' வந்து தங்களைத் துன்பங்களிலிருந்து மீட்பார் என்று இவர்கள் நம்பினர்.

இந்த நம்பிக்கையில் வந்த சீடர்கள் இயேசுவின் விண்ணேற்பின்போது “ஆண்டவரே, இஸ்ரயேலுக்கு ஆட்சியுரிமையை மீண்டும் பெற்றுத் தரும் காலம் இதுதானோ?" (திப 1:6) என்று கேட்டனர்.

**இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய வாழ்வியல் விழுமியங்கள்**

பல இருந்தாலும், ஒன்றை மட்டும் காண்போம். இன்றுள்ள சமுதாயம் 'பின் நவீனத்துவ சந்தைப் பொருளாதார ஆன்ட்ராய்டு சமுதாயமாகும். இந்தச் சமுதாயத்திற்கு இயேசுவின் பிறப்புத் தரும் செய்தி, இயேசு நம்மைச் செல்வராக்க ஏழையானார் என்பதே அது. அதாவது, சமய- சமுதாய-பண்பாட்டு நிலைகளில் ஏழைகளாக உள்ள நமக்கு அதை மீட்டுத் தா நம்மைத் தேடிவருகிறார். அதனால், கால ஓட்டத்தில், உயர்வுக் குரியதாக இருந்த இடையருக்குரிய தொழிலை' அசிங்கத்துக்குரியதாக மாற்றிய யூதர்களைப் போலவோ, சமய வாழ்க்கையில் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, இயேசுவையே ஏற்க மறுத்த தலைமைக்குருக்கள், பரிசேயர், மறைநூல் அறிஞர்களைப் போலவோ நாம் மாறிவிடக்கூடாது.

**முடிவாக...**

'அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவா 1:11) என்ற நிலை யூதர்களிடையே அரசியல்- சமய-சமுதாய-பண்பாட்டு நிலைகளில் இருந்தது. இன்றும் அதே நிலை நாம் வாழும் சமுதாயத்தில் நீடிக்கிறது என்றால், இயேசுவின் பிறப்புத் தரும் மகிழ்ச்சியும், பகிர்வும், அமைதியும், மீட்பும் நமக்குக் கிடைக்காமல் போவதற்கு வாய்ப்புண்டு. நாம் ஆயுதம் கொண்டு அமைதி தர முயன்ற உரோமையர்களைப் போலல்ல. அல்லது வெளித் தயாரிப்புக்குச் சிறப்பிடம் கொடுத்த குள்ளநரி மனநிலையில் தன்னையே 'யூதர்களின் அரசனாக்கிக் கொண்ட பெரிய ஏரோது போலல்ல: அல்லது இயேசு எங்கே பிறப்பார் என்ற உண்மையை அறிந்தும், இயேசுவைத் தேடிச் செல்லாமல் இருந்த சமயத் தலைவர்களைப் போலல்ல: அல்லது கால ஓட்டத்தில் உயர்ந்த விழுமியங்களையும் வாழ்வின் நிலையை மறந்து இடையர்களை இழிவாகக் கருதிய யூத சமயம் - சமுதாயம் போலல்ல: மாறாக நாம் இடையர்களைப் போல மாறி மகிழ்ச்சியின் நற்செய்தியைப் பிறருக்கும் அறிவிக்க வேண்டும் (லூக். 2:20)



நாம் ஞானிகள் போல மாறி இயேசுவைத் தேடிச் சென்று, பகிர்வைக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு நாம் அனைவரும் மாற்று வாழ்வியல் விழுமியங்களால் வாழ்வை அழகு செய்தால், இயேசு நமது உள்ளத்திலும், இல்லத்திலும் பிறப்பார். என்ன இயேசு பிறப்பதற்கு வழி செய்வோமா?

# கன்னிமரியா கடவுளின்தாய்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அந்நாட்களில் மரியாவுக்கு உரோமை நகரில் அழகுமிகு பேராலயம் ஒன்று கட்டிப் பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை அன்னை மரியாவுக்குப் பல கோவில்கள் எழுப்பி, அவரின் தாய்மையைத் திருஅவை தொடர்ந்து வாழ்த்தியும், வணக்கம் செலுத்தியும் அவரின் தாய்மைப் பிரசன்னத்தையும் ஒவ்வொரு நாளும் உணர்ந்து தம் இறையாட்சிப் பணியைத் தொடர்கின்றது. எனவே இந்த புத்தாண்டிலும் நாம் அந்த அன்னையின் அருட்காவலிலிருந்து, இறை ஆசீரோடு மகிழ்ச்சியாக வாழ்வோம். வளர்வோம். நாமும் ஒருவர் ஒருவருக்குத் துணையாக நின்று வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம்.

# தமிழர்களுக்குச் சாதகமாக கனடா! மாற்றியமைக்கும் உத்தியில் இலங்கை

### சர்வதேச நீதிமன்றத்தில் நியாயம் கேட்கக்கூடிய அளவுக்குச் செயலில் ஈடுபட வேண்டிய சில புலம்பெயர் அமைப்புகள் விலைபோவது ஏன்?

அ.நிக்ஸன்

புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ்த் தேசியத்தை இலக்காகக் கொண்ட ஈழத் தமிழ் அமைப்புகளின் பலத்தை அறிந்த ஒரு பின்னணியிலேதான், இலங்கை ஒற்றை யாட்சி அரச கட்டமைப்பு அமெரிக்கா, கனடா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுலில் இயங்கும்குறிப்பிட்ட சில தமிழ் அமைப்புகளை யும் தனிநபர் குழுக்களையும் பயன்படுத்த முற்பட்டிருக்கின்றமை பட்டவர்த்தனமாகும்.

ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களும் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப் புக்குள் இணைந்து வாழத் தயார் என்ற பொய்யான பரப்புரையை மேற்கொண்டு, கனடா போன்ற நாடுகளுக்குக் கணக்கைக் காண்பிக்கும் திட்டங்களை சிங்கள அரசி யல் தலைவர்கள் கன கச்சிதமாக செய்கின்ற னர் என்பதும் பகிரங்கம்.

தற்போது இலங்கை பொருளாதார ரீதியில்பலவீனமாகவுள்ளது. இன்று உலகில் பொருளாதார பிச்சை எடுக்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளதால் 2009 இல் போர் நடந்த போது அமெரிக்க இந்திய அரசுகளுடன் பேரம் பேசியது போன்ற ஒரு பலத்தை இலங்கை தற்போது இழந்துள்ளது.

பலம் இருந்தபோது இலங்கை எடுத்த நடவடிக்கைகள் வேறு. தற்போது பலவீன மான நிலையில் இலங்கையின் செயற்பாடு கள் மற்றொரு வகையாக மாறியுள்ளதை அவதானிக்க முடியும்.

குறிப்பாகத் தற்போது மாறிவரும் உலக அரசியல் ஒழுங்குக்கு ஏற்ப ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கையின் உள்ளக விவகாரமாக மற்றுவதே பிரதான இலக்கு.

ஆகவே புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளிடையே ஒற்றுமை இல்லா விட்டாலும், அரசியல் விடுதலைக்குரிய தீர்வு விவகாரத்தில் ஒருமித்துச் செயற்படவேண்டிய காலம் இது. கனடா போன்ற நாடுகளில் இருந்து அதற்குரிய வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க முடியும்.

இஸ்ரேல் பலஸ்தீன மோதல் தீவிர மடைந்துள்ள நிலையில் இந்தப் பிரச்சி னைக்கு "இரு அரசுகள்" என்பதுதான் தீர்வு என்று தற்போது உலகம் பேச ஆரம்பித் துள்ளது. அதேபோன்று ஈழத்தமிழர் விவ காரத்திலும் மாற்றங்கள் வர ஆரம்பித்துள் ளன. ஆனால் இது பற்றித் தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ்ப் பத்தி எழுத்தாளர் கள் சிலரும் பேசுவதில்லை.

கனடாவில் காலிஸ்தான் தலைவர் படு- கொலை செய்யப்பட்ட விடயத்தில் வல் லரசு அந்தஸ்த்திலுள்ள இந்தியாவுடன் கனடா முரண்பட்டது. ஆனால் இந்தியாவில் சீக்கிய மக்களுக்காகப் போராடும் காலிஸ் தான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மிகச் சிறிய அளவிலேயே உண்டு. சீக்கிய மக்களில் பெரும்பான்மை யோர் இந்திய மத்திய அரசுடன் இணைந்தே வாழ்கின்றனர். கனடாவில் சிறிய புலம்பெயர் அமைப்பாக இயங்கிக் கொண்டிருந்த காலிஸ்தான் இயக்கத் தலைவர் படுகொலை செய்யப் பட்டமைக்காகக் கனடா இந்தியாவோடு முரண்பட்டது என்றால், கனடாவில் வாழும் சீக்கியப் புலம்பெயர் மக்களின் வாக்குகளுக் காகவே என்பது நன்கு தெரிந்த ஒன்று.

ஆகவே கனடாவில் வாழும் தமிழர்கள் கனடாவில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளுடன் இணைந்து அரசியல் செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டியது மிக மிக அவசியமானது.

கனடாவில் பூர்வீகமாக வாழ்ந்த பழங்குடி மக்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று தற்போது கனடா அரசு ஒப்புக்கொள்கிறது. அதற்காகப் பரிகாரம் தேடவும் கனடா ஏற் பாடு செய்துள்ளது. இப் பின்புலத்தில் ஈழத் தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று கனடா கூறினாலும், கனடா அரசின் இலங்கை பற்றிய வெளியுறவுக் கொள்கையில் அது இல்லை.

பிரதமர் யஸ்ரின் ரூடோவை மையப் படுத்திய லிபரல் கட்சி வாக்கு அரசியலுக் காக அவ்வாறு கூறினாலும், 2006 இல் விடுதலைப் புலிகளுக்குக் கனடாவில் தடை விதித்தபோது பதவியில் இருந்த கொன்சர் வேட்டிவ் கட்சியும் ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று தற்போது கூற ஆரம்பித்துள்ளது

வாக்கு அரசியலுக்காக இந்த இரு பிர தான அரசியல் கட்சிகளும் இன அழிப்பு என்று ஏட்டிக்குப் போட்டியாக மார்தட்டினாலும் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டிய உத்தி புலம்பெயர் அமைப்புகளுக்குரியது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுக- ளில் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டாலும் அங்கு புலிகளின் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லப்படுவோர் ஒப்பீட்டளவில் பாதிக்கப் படுவதில்லை. இந்த நாடுகளில் அகதிக் கோரிக்கை அல்லது அரசியல் தஞ்சம் கோரும் ஈழத்தமிழர்கள் தங்களைப் புலிக- ளின் போராளி அல்லது ஆதரவாளன் என்று கூறி பிரஜாவுரிமையைப் பெறமுடியும்.

ஆனால் கனடாவில் அவ்வாறு இல்லை. புலி உறுப்பினர் அல்லது புலிகளின் ஆதர வாளன் என்று தெரிந்தாலே கனடாவில் அகதி அந்தஸ்து அல்லது அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்படும். இன்றுவரை கனடாவில் இவ்வாறுதான் நிலைமை உள்ளது.

பிரித்தானிய அரசு புலிகளுக்குத் தடை விதித்திருந்தாலும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அங்கு தொடர்ந்தும்வாழஅனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால் கனடாவில் அவ்வாறானதொரு சூழல் இன்றுவரையும் இல்லை.

ஆகவே பிரித்தானியாவும் அமெரிக்காவும் அரசியலுக்காகப் புலிகளைத் தடை செய்ததே தவிர, புலிகளை இந்த நாடுகள் உண்மை யான பயங்கரவாதிகளாகக் கருதவில்லை. இதனை பராக் ஒபமா, கிளாரி கிளிங்டன் போன்ற தலைவர்களின் பேச்சுக்களில் இருந்தே அறிய முடியும்.

இந்த நிலையில் ஈழத்தமிழர்க ளுடன் இவ்வளவு கடுமையாக இயங்கிய கனடா ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது எதற்காக என்று அங்கு வாழும் சிங்களப் புலம்பெயர் மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

ஆனால் கனடாவில் சிங்கள மக் கள் மிகக் குறைந்தளவிலேயே வாழ்க்கின்ற னர். அப்படியிருந்தும் கனடாவைத் தொடர்ந் தும் இலங்கையின் பக்கம் வைத்திருக்கும் செயற்பாடுகளைச் சிங்களப் புலம்பெயர் அமைப்புகள் தீவிரப்படுத்தியுள்ளன.

மகிந்த ராஜபக்ச ஜனாதி- பதியாக இருந்தபோது 2013 இல் இலங்கையில் சொக்கோம் மாநாடு நடைபெறுவதற்குரிய அத்தனை ஒத்துழைப்புகளையும் கனடா அரசு வழங்கியிருந்து. அடுத்த ஆண்டு கனடாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் தற்போது கொன் சர்வவேற்றிக் கட்சியின் தலைவரும் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கூற ஆரம்பித்துள்ளார்.

இது வாக்கு அரசியல் என்று தெரிந்தாலும் இலங்கை தொடர்பான கனடா அரசின் வெளியுறவுக் கொள் ளையில் இன அழிப்பு என்பதைச் சேர்ப்பதற்குரிய செயலில் ஈடுபடவேண் டிய பொறுப்பு புலம்பெயர் அமைப்பு களுக்குரியது.

மியன்மார் நாட்டில் ரோஹின்யா முஸ்லிம்கள் இன அழிப்புக்கு உள் ளாகின்றமை தொடர்பாக ஆபிரிக்க நாடொன்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது. அதனை மியன்மார் அரசு எதிர்த்திருந்தது.

ஆனால் எந்த ஒரு நாட்டிலும் இன அழிப்பு நடந்தாலும் அதற்கு எதிராக மற்றுமொரு நாடு சர்வதேச நீதி மன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்ய முடியுமென நீதி- பதிகள் தமது விளக்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆகவே கனடாவில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கனடா அரசின் இலங்கை பற்றிய கொள்கையில் மாற்றங் களை ஏற்படுத்தும் அளவுக்குப் புலம்பெயர் தமிழர்கள் செயலாற்ற வேண்டும். கனடா மூலமாகவே சர்வதேச நீதிமன்றத்தில்வழக் குத் தாக்கல் செய்யவும் முடியும்.

இதன் காரணமாக ஈழத் தமிழர்கள் தொடர்பான விடயத்தில் கனடாவின் போக்கில் மாற்றம் இருப்பதை அறிந்தே கனடாவில் இயங்கும் தமிழ்க் காங்கிரஸில் அங்கம் வகிக்கும் சில உறுப்பினர்களையும் வேறு சில தனிநபர்களையும், இலங்கை விலைக்கு வாங்கி அவர்கள் தங்கள் பக்கம் நிற்பது போல கனடா அரசுக்குக் கணக்குக் காட்ட முனைகிறது.

அதாவது ஈழத்தமிழர்களின் பல பொது அமைப்புகள் இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புடன் இணக்க அரசியலுக்குச் சம் மதித்துள்ள நிலையில் தமிழ் இன அழிப்பு என்று பேச வேண்டிய அவசியம் இல்லை யெனக் கனடா அரசுக்கும் கனடாவில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளுக்கும் இலங்கை பாடம் கற்பிக்க முற்படுகின்றது.

கனடா அரசு ஈழத்தமிழர்களின் நியாயப் பாட்டை ஏற்றுள்ளது என்பது பற்றித் தற் போது ஜனாதிபதி ரணில், புதுடில்லி யில் உள்ள இலங்கைத் தூதுவர் மிலிந்த மொற கொட, பேராசிரியர் ரெஹான் குணசேகர, ஆகியோர் நன்கு புரிந்துள்ளனர். இதன் காரணமாகவே தமக்குச் சாதகமான சர்வதேச தன்னார்வ நிறுவனங்கள் ஊடாக இமால- யப் பிரகடனம் போன்று மேலும் பல திட்டங் களை இலங்கை வகுத்து வருகின்றது.

கனடா தமிழ்க் காங்கிரஸின் சில உறுப் பினர்கள்தான் உலகத் தமிழர் பேரவையின் இமாலயப் பிரகடனத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினாலும், தமிழ்க் காங்கிரஸின் மற்று மொரு முக்கிய உறுப்பினரான கனடா நாடா ளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்த சங்கரி, இமா லயப் பிரகடனத்தை நிராகரித்துள்ளார். தமிழர் தாயகத்தில் வாழும் அவருடைய தந்தையான ஆனந்த சங்கரியும் நிராகரித் துள்ளார்.

இந்த நிலையில் சுரேன் சுரேந்திரன் மகிந்த ராஜபக்சவையும் சந்தித்து இமாலயப் பிரகடனத்துக்கு ஆதரவு கோரியிருக்கிறார். ஆகவே சிங்கள அரசியல் தலைவர்கள் அவ சர அவசரமாக இலங்கை யின் பொருளா- தார பலவினங்களுக்கு மத்தியிலும் கனடா போன்ற மேற்கு நாடுகளை மயக்கி மீண்டும் இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குரிய சாதக மான அரசியல் சூழலை உருவாக்க முற்படு வதன் விளைவுகள்தான் இந்த இமாலயப் பிரகனடம் என்பது மிகத் தெளி வாகியுள்ளது.

இன அழிப்புத்தான் என்று கனடாவின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் பகி ரங்கமாகக் கூற ஆரம்பித்துள்ள பின்னணியில் கனடா வில் புலிகள் மீதான தடையை நீக்குமாறு இதுவரை தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரவில்லை..

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துக்குக் கனடா பல வருடங்களாகத் தடை விதித்திருக்கின்றது. ஆனால் கனடா செல்வதற்குத் தன் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குமாறு கஜேந்திரகுமார் பொன்னபலமும் கோரவில்லை.

இன அழிப்புப் பற்றிக் கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழர்களுடன் கலந்து ரையாடச் சந்தர்ப்பம் தாருங்கள் என்று கஜேந்திரகுமார் இதுவரையும்கோரவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச் சந்திரனுக்கும் கனடா தடை விதித்திருக்கின்றது. ஆனால் 2001 இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் புலிகளுடன் ஏற்பட்ட புரிதல் பற்றிய விளக்கங்களைக் கொடுத்துத் தன் மீது கனடா விதித்த தடையை நீக்குவதற்குரிய வேலைத் திட்டங்களில் சுரேஸ் பிரேமச் சந்திரனும் ஈடுபடவில்லை.

ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் நடந்தது இன அழிப்புத்தான் என்றால் இந்த இருவருக்கும் விதிக்கப்பட்ட தடை- யைக் கனடா தொடர வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

ஆனால் தமிழர்களுக்குச் சாதகமாக கனடாவின் தற்போதைய போக்கைப் புரிந்துகொண்டு இமாலயப் பிரகடனம் போன்ற ஏமாற்றான கூட்டுரிமை எனப்படும் நல்லிணக்கப் பொறிகள் மூலமாகச் சிங்கள அரசியல் தலைவர்கள் காய் நகர்த்துகின்றனர்.

குறிப்பாக இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஒட்டுமொத்த ஈழத்தமிழர்க ளும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதைக் காண்பிக்க ஆங்கில மொழியில் காணொ- ளிக் காட்சி ஒன்றை இலங்கை தயாரித்து வெளியிட்டுள்ளது.


கனடா முழுவதிலும் இக் காணொளி காண்பிக்கப்பட்டு வருகிறது. புலம்பெயர் தேசமெங்கும் இக் காணொளியை இலங்கை கொண்டு செல்லவுள்ளது.

உக்ரெயன் - ரசிய போரினாலேயே கடனா இந்தியாவுடன் முரண்பட்டது. இதனை கனடாவில் வாழும் சீக்கியர்கள் திட்டமிட்டு இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தினர்.

மிகப் பெரிய இந்தியாவுடன் கனடா வைச் சீக்கியர்கள் முரண்பட வைத்தனர் என்றால், ஈழத்தமிழர் விவகாரத்தில் மிகச் சிறிய நாடான இலங்கையைக் கனடா முற்றா கப் புறக்கணிப்பதற்குரிய ஏற்பாட்டை புலம் பெயர் தமிழர்களினால் ஏன் செய்ய முடியா துள்ளது? இது புத்தாண்டுச் சிந்தனை.

## விண்ணக வாழ்வின் 12ம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் 12 . 07 . 1942



பேரின்ப வான் வீட்டில் 22 . 12 . 2011

**அமரர் வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன் (JP)**

(பேரின்பம் – வல்வெட்டித்துறை)

யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி M.O.H (2001-2011)

என்றென்றும் நினைவுகளுடன்

யாழ் மாநகரசபை சுகாதாரதுறை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

உறவினர்கள், மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,

பேரக்குழந்தைகள்: தேசன், யோவான் அருணன், ஆன்கிறிஸ்ரா, அருள், விக்ரினா

ஆவே மரியா
72 கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

# குருத்துவ வாழ்வில் 60 ஆண்டுகள்



ஓய்வு நிலை ஆயர்
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகையின்

குருத்துவ வாழ்வில்
பவள விழாக் காணும்
ஆயனே உமது நாமம் வாழ்க!
உடல் உள நலன்கள் பலவும் பெற்று
அன்னை மரி அருளில் நீண்ட பல
ஆண்டுகள் வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்

# குருத்துவ வாழ்வில் பவளவிழா



அருட்பணி
J. E. ஜெயசீலன்

தேவதாயின் குரலாய்
ஆசி மழை பொழிந்த குருவே
உம் குருத்துவப் பணியின்
அறுபது ஆண்டுகள் நிறையும்
அழகான நேரமதில்
நன்றியோடு செபங்களையும்
பாசத்தோடு வாழ்த்துகளையும்
பகிர்கின்றோம்

உடல் ஆரோக்கியத்தோடு
நீண்டு தொடரட்டும்
குருவே உம் பணிகள்...

## பேராலயத்தில் ஆயர் ஜஸ்ரின் மண்டபம்



யாழ் புனித மரியன்னை பேராலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த மண்டபக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டடத் திறப்புவிழா கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை மவுலிஸ் அடிகள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை புதிய மண்டபத்தை அசீர்வதித்துத் திறந்துவைத்தார்.

புதிதாக அமைக்கப்பட்ட இம்மண்டபத்திற்கு ஆயர் ஜஸ்ரின் மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதுடன் இதன் பெயர்ப் பலகையை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## இடைக்கால செயலகத்தினர் யாழ். ஆயருடன் சந்திப்பு



உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினர் யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்டு மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையுடனான சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த 11ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தற்கால நிலைமைகள் தொடர்பாகவும் அவர்கள் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகள் குறித்தும் ஆயர் அவர்களுடன் கலந்துரையாடினர்.

## யாழ். சிறைச்சாலையில் யாழ். ஆயர் தலைமையில் திருப்பலி



கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில் யாழ். ஆயர் அவர்கள் யாழ். சிறைச்சாலைக்கு விஜயம் செய்து அங்கிருக்கும் சிறைக் கைதிகள் உத்தியோகஸ்தர்களோடு இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து, சிறைக் கைதிகளின் மறு வாழ்வுக்காக செபித்து நின்றார்.

திருப்பலி நிறைவில் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் சிறைக்கைதிகள் இணைந்து நடாத்திய ஒளி விழா நிகழ்விலும் ஆயர் அவர்கள் கலந்து கொண்டு சிறைக் கைதிகளுக்குப் பரிசுப்பொருட்களை வழங்கி மகிழ்வித்தார்.

இந் நாள் நிகழ்வுகள் அனைத்தையும் சிறைச்சாலை ஆன்மீகக் குரு அருட்பணி. A.P. திருமகன் அடிகள் சிறப்புற ஒழுங்கமைத்திருந்தார்.

## யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த கில்மிஷா சாதனை



இந்தியா Zee தமிழ் தொலைக்காட்சியில் நடைபெற்ற ஸரிகமப Little Champs Season Three பாடல் போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து பங்குபற்றிய செல்வி கில்மிஷா உதயசீலன் அவர்கள் வெற்றிபெற்றுச் சாதனை புரிந்துள்ளார். 14வயது நிரம்பிய இவர் யாழ். மறைமாவட்டத்தின் அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தை சேர்ந்தவர்.

இவர் சிறு வயது முதல் ஆலயத் திருவழிபாடுகளில் திரு இசைப்பாடல்களை பாடி வழிபாடுகளை மெருகூட்டி வந்துள்ளார்.

இவரின் அளப்பெரிய திறமையும், தளராத அர்ப்பணிப்பும் அவருக்கு மட்டுமன்றி வட மாகாணத்திற்கும் இலங்கைத் தீவுக்கும் மகத்தான பெருமையை ஏற்படுத்தியுள்ளது. 14 வயதில் இவர் உணர்ச்சி மற்றும் விடா முயற்சியின் நம்ப முடியாத சக்தியை உலகிற்கு நிரூபித்துள்ளார். இவரது இசைப்பயணம் தொடர்ந்து செழிக்கட்டும்.

மற்றவர்கள் தங்கள் கனவுகளை அதே ஆர்வத்துடனும் உறுதியுடனும் தொடர இவரது வெற்றி துணை போகின்றது.

இவரின் வெற்றியை அறிந்து இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கில்மிஷாவிற்கு தனது வாழ்த்துக் கடிதத்தை எழுதி அனுப்பியுள்ளார். பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக கில்மிஷாவிற்கு எம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம். அவரது இசைப்பயணம் இறை ஆசீருடன் தொடரட்டும்.

## சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கிறிஸ்மஸ் கரோல்



யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட கிறிஸ்மஸ் கரோல் வழிபாடு கடந்த 10ஆம் திகதி குருத்துவக் கல்லூரி ஜோய் கிறிசோஸ்தம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அடிகளின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மறைக்கோட்டத்தில் பணியாற்றும் துறவற சபைகளைச் சேர்ந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் அருட்சகோதரர்கள் இணைந்து கிறிஸ்மஸ் கரோல் கீதங்களை வழங்கினார்கள்.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளெனப் பலரும் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## இளவாலை இளையோர் ஒன்றிய கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்



இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் கடந்த 10ம் திகதி மானிப்பாய் பிரதேசசபைக் கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத் தலைவர் செல்வன் நிறாஜ் தலைமையில் இணைப்பாளர் அருட்பணி ம. பத்திநாதர் அடிகளின் ஒழுங்குபடுத்தலில், மறைமாவட்ட இளையோர் ஒன்றிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி பா. பிரயன் அடிகள் பிரதம விருந்தினராகவும், மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜெயக்குமார் அடிகள் சிறப்பு விருந்தினராகவும், இளைமானி திருமதி. நீதிமதி அவர்களும் மறைக்கோட்டக் குருக்களும் இணைந்து சிறப்பித்திருந்தார்கள். 9 பங்குகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.